Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 21, 2021

திங்கட்கிழமை ஜூன் 21, 2021 | ஒளி: 07 கதிர்: 27 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## வாழ்த்தைப் பகிர்ந்தார் சீன ஜனாதிபதி ஜின்பிங்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது 72ஆவது பிறந்தநாளை, நேற்று (20) கொண்டாடினார். அவருக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தனர்.




தொடர்ச்சி P2

## ‘முழங்காலிடல்’ விவகாரம் சூடுபிடிப்பு







**முழுமையான விசாரணையின் பின்னர், கடுமையான ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்**

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில், சிவிலியன்களைத் துன்புறுத்தியது தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ வீரர்களை, இராணுவத்திலிருந்து நீக்கிவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. பயணக் கட்டுப்பாடுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டின் கீழ், அந்த நபர்களை வீதியின் ஓரத்தில் முழங்காலிடச் செய்து, கைகள் இரண்டை மேலே உயர்த்திக்கொண்டு இருக்குமாறு, இராணுவத்தினர் பணித்துள்ளனர். அவ்வாறே சிவிலியன்களும் இருந்துள்ளனர். இந்தப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின.

தொடர்ச்சி P2

## ‘சர்வாதிகாரத்துக்கு எடுத்துக்காட்டு’

**முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட இச்சம்பவம் அவர்களது சுய கௌரவத்தை கொச்சைப்படுத்துகின்றது**

ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.ஏ.பரீட், அ.அச்சுதன்



“ஏறாவூரில் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவற்காக வீதிக்கு வந்த பொதுமக்கள் சிலரை, வீதியில் முட்டுக்காலில் நிற்க வைத்த சம்பவம், நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போவதை எடுத்துக்காட்டுகின்றது” என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

30 நாள்களுக்குப் பின்னர்

# நிபந்தனைகளுடன் நாடு திறக்கப்பட்டது



**23ஆம் திகதி இரவு 10 மணிக்கு அமலாகி, 25 அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும்**

நாடளாவிய ரீதியில், மே 21ஆம் திகதி இரவு 11 மணிமுதல் அமல்படுத்தப்பட்டிருக்கும் பயணக் கட்டுப்பாடுகள் இன்று (ஜூன் 21 ஆம் திகதி) அதிகாலை 4 மணியளவில் நீக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## ‘ரணில் ஒரு பட்டமரம்’

**நாம் வேண்டாமென்று ஒதுக்கிய ஒருவர் பின்னால், மீண்டும் ஓடும் அளவுக்கு எம்மில் எவருக்கும் பைத்தியம் பிடிக்கவில்லை**




முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒரு ‘பட்டமரம்’ போன்றவர் என்பதுடன், காணாமற்போன அரசியல்வாதி என்ற நினைப்பே எம்மிடம் உள்ளதெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவர் சொல்லும் கருத்துகள், செய்யும் செயற்பாடுகள் குறித்து நாம் கணக்கெடுப்பதில்லை; எமக்கு அக்கறையும் இல்லை என்றார்.

தொடர்ச்சி P2

## சிங்கத்துக்கு சிகிச்சையளிக்க இந்தியாவிடம் உதவி

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ‘தோர்’ எனும் சிங்கத்துக்கு சிகிச்சை அளிப்பதற்காக, இந்தியாவின் மத்திய மிருகக்காட்சி சாலை அதிகார சபையின் ஒத்துழைப்பை இலங்கை கோரியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## மகனின் சடலத்தைக் கண்டு மாரடைப்பால் மரணித்த தாய்

**மனைவியுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி, ஜயங்கேணியில் வாழ்ந்து வரும் அவரது தாயார் வீட்டுக்கு வந்துள்ளார்**

கனகராசா சரவணன்

உயிரிழந்திருந்த தனது மகனின் சடலத்தைக் கண்ட தாயார், சில மணி நேரத்திலேயே மாரடைப்பால் மரணித்த சம்பவம், மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஜயங்கேணி பிரதேசத்தில் நேற்று (20) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## வத்தளை, ஹேகித்தையில் 128 பேருக்கு கொரோனா

**பணியாற்றுபவர்களில் 92 பேர் இந்தியர்கள்**

வத்தளை, ஹேகித்த பிரதேசத்திலுள்ள இரும்புக் கம்பிகள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களில் 128 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

தொடர்ச்சி P2

## 24 கிராமசேவகர் பிரிவுகள் இன்று முதல் முடக்கம்

12 மாவட்டங்களில், 24 கிராம சேவகர் பிரிவுகள், இன்று (21) காலை 4 மணிமுதல் முடக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தமிழகத்துக்குள் ஊடுருவிய

## இலங்கையர் 34 பேரிடமும் துருவித் துருவி விசாரணை

**அடைக்கலம் கொடுத்தவருக்கு வலை வீச்சு**

சண்முகம் தவசீலன்



இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில், கனடா செல்ல தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கைத் தமிழர்கள் மங்களூரில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

13.34 சதுர கி.மீ பரப்பளவில் மாத்திரமே

## மிதிவெடி அகற்ற வேண்டியுள்ளது




சுப்பிரமணியம் பாஸ்கரன்

தேசிய இலக்கை பூர்த்திசெய்து, இலங்கையை மிதிவெடி இல்லாத நாடாக மாற்றுவதற்கு, 13.34 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் உள்ள மிதிவெடிகள் மாத்திரமே, இன்னும் அகற்ற வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தென்னைகளை தறிக்கத் தடை



பிரதேச செயலாளர்களின் அனுமதியின்றி தென்னை மரங்களைத் தறிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தென்னை மரமொன்றைத் தறிப்பதற்கான

தொடர்ச்சி P2

## ‘பொறுப்பின்றி மக்கள் நடந்தால் 100 மரணங்கள் தினமும் பதிவாகும்’

**மிகக் கவனமாக நடந்துகொள்ளுமாறு மக்களுக்கு அறிவுரை**

பயணக் கட்டுப்பாடுகள் இன்று (21) தளர்த்தப்பட்டுள்ள நிலையில், மக்களை மிகவும் பொறுப்புடன் செயற்படுமாறு, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘அரசாங்கம் பலமடையுமே தவிர பலவீனமடையாது’

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கம் சிறந்த முறையில் வெற்றிகொள்ளும் எனத் தெரிவித்த சமுர்த்தி, நுண்நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக அரசாங்கம் பலமடையுமே தவிர பலவீனமடையாது என்றார்.

தொடர்ச்சி P2

## தமிழக முதலமைச்சரே கவனியுங்கள்...



செ.கீதாஞ்சன்

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாம் என்ற தனிச் சிறையில் பல ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை தமிழர்கள், தங்களை தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தி, நேற்று (20), 12ஆவது நாளாகவும் தொடர் காத்திருப்பு போராட்டத்தை நடத்தினர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘முழங்காலிடல்’ விவகாரம் சூடுபிடிப்பு

இந்நிலையில், அவ்வாறு பணித்த இராணுவத்தினரை, சேவையிலிருந்து நீக்கிவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை, பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் கட்டளையின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் என இராணுவம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவ பொலிஸ் ஊடாக, முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவம் அறிவித்துள்ளனர். முழுமையான விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர், அந்த இராணுவ வீரர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுங்காற்று நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.

விசாரணைகள் நிறைவடையும் வரையிலும் அவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்த்தைப் பகிர்ந்தார் சீன ஜனாதிபதி ஜின்பிங்

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தனது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார். அந்த வாழ்த்து, இலங்கைக்கான சீன தூதுவராலயத்தின் டுவிட்டர் ஊடாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘உலகம் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள, சீனாவும் இலங்கையும் நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளன’ என அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘சர்வாதிகாரத்துக்கு எடுத்துக்காட்டு’

இது தொடர்பாக அவர் நேற்று (20) ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த நாடு ஜனநாயக நாடு. சட்ட ஆட்சி அமலில் உள்ள நாடு. எனவே, எல்லாவற்றையும் சட்ட ரீதியாகவே அணுக வேண்டும். அதுவும் ‘சட்டத்தின் முன் யாவரும் சமம்’ என்ற அரசியலமைப்பு வாசகத்துக்கமைய எல்லோருக்கும் சட்டம் அமல்படுத்த வேண்டும். பாரபட்சம் காட்டக்கூடாது.

ஏறாவூர் சம்பவம் சட்டத்துக்குப் புறம்பானது. மனிதாபிமானமற்றது. ஒவ்வொருவருக்கும் சுய கௌரவம் உள்ளது. வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட இச்சம்பவம் அவர்களது சுய கௌரவத்தை கொச்சைப்படுத்துகின்றது.

பயணக் கட்டுப்பாடுகள் அமலில் இருப்பதாகக் கூறப்பட்டாலும் நாடு முழுவதும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் உலாவுகின்றன. அதேபோல, பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வீதிகளில் பயணிப்பதை நாம் காண்கிறோம்.

இந்நிலையில், ஏறாவூர் மக்களை மட்டும் வதைக்கின்ற இச்செயல் நாட்டில் நியாயமான சட்ட ஆட்சி இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சிங்கத்துக்கு சிகிச்சையளிக்க....

கொரோன தொற்றையடுத்து தனியான கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிங்கத்துக்கு வெளிப்புறத்தில் இருந்து ஒட்சிசன் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகவும் அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 24 கிராமசேவகர் பிரிவுகள்....

கம்பஹா, அம்பாறை, மட்டக்களப்பு, இரத்தினபுரி, களுத்துறை, யாழ்ப்பாணம், மாத்தளை, புத்தளம், நுவரெலியா, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே கீழுள்ள பிரதேசங்கள் முடக்கப்படவுள்ளன.

1. கொழும்பு, தெமட்டகொட ஆராமய பிரதேசம் 66ஆம் தோட்டம்
2. அம்பாறை, சம்மாந்துறை நவ வத்தலபிட்டிய கிராமம்
3. மட்டக்களப்பு, ஏறாவூர் கிராம சேவகர் பிரிவு 191
4. மட்டக்களப்பு, வாழைச்சேனை மீர்வோதி கிழக்கு 207
5. மட்டக்களப்பு, வாழைச்சேனை மீர்வோதி மேற்கு 207 பீ
6. மட்டக்களப்பு, வாழைச்சேனை மான்சோலை பதுரிய 207பீ
7. யாழ்ப்பாணம் மானிப்பாய் சாவக்கட்டு ஜே.131
8. நுவரெலியா கினிகத்ஹேன கரோலினா தோட்டம் கடவல பிரிவு

ஆகியனவே மறு அறிவித்தல் வரையிலும் முடக்கப்பட்டுள்ளன.

## தென்னைகளை தறிக்கத் தடை

அவசியம் இருப்பின் அது குறித்து பிரதேச செயலாளரின் அனுமதியை பெறுவது அவசியமாகும். இந்த விடயம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

# நிபந்தனைகளுடன் நாடு திறக்கப்பட்டது

மே 21ஆம் திகதி அமல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டும் மே 25ஆம் திகதியன்று அதிகாலை 4 மணிமுதல் இரவு 11 மணி வரையிலும் தளர்த்தப்பட்டது.

எனினும், மே 31, ஜூன் 4ஆம் திகதிகளில், அவ்வாறே அத்தியாவசிய தேவைகளுக்காக தளர்த்தப்படுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட போதிலும், அந்தக் கட்டுப்பாடுகள் ஜூன் 7 வரை நீடிக்கப்பட்டு, மீண்டும் ஜூன் 14 வரை நீடிக்கப்பட்டன. அன்றைய தினமும் தளர்த்தப்படாது, இன்று (ஜூன் 21) அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சில வரையறையின் கீழும், கடுமையான நிபந்தனையின் பிரகாரம் நாடு திறக்கப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

அந்த நிபந்தனைகளின் பிரகாரம்,

* அலுவலகங்களுக்கு குறைந்தபட்ச ஊழியர்களை சேவைக்கு அழைக்கலாம்
* வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடிய பணியாளர்கள் இருந்தால், அவர்களே அச்சேவைக்கு (வீட்டிலிருந்து வேலை) பயன்படுத்த வேண்டும்.
* பொதுப் போக்குவரத்தில், இருக்கைகளின் எண்ணிக்கையில் மட்டுமே பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டும்.
* ஒவ்வொரு நபரும் முகக்கவசங்களை அணிவது கட்டாயமாகும்.
* தனிமைப்படுத்தல் சட்டங்களை அவ்வாறே கடைப்பிடித்தல் வேண்டும்.
* மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் அவ்வாறே கடைப்பிடிக்கப்படும்.
* ஏதாவது விசேடமான காரணமாக இருந்தால் மட்டுமே, மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியும்.
* ஒன்றுகூடல்கள், சுற்றுலாப் பயணங்கள், சுற்றுலாக்கள், யாத்திரை செல்ல அனுமதி இல்லை.
* காலிமுகத்திடல் வெளியரங்கம் மற்றும் பொது இடங்களில் குழுக்களாக ஒன்றுகூட முடியாது. 8
* நுகர்வோர் சேவைகளை வழங்கும் அங்காடிகள், வர்த்தக நிலையங்களில் சுகாதார வழிமுறைகளை அதியுச்சத்தின் கீழ் முன்னெடுத்தல்.
* அங்காடிகளில், கைகளைக் கழுவிக்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
* உடல் வெப்பநிலையை பரிசோதனை செய்யவேண்டும்.

“நாடு திறக்கப்பட்டாலும் தனிமைப்படுத்தல் சட்டத்திட்டங்கள் முறையாக பேணப்படுகின்றதா என்பது தொடர்பில், அவதானிப்பதற்கு நாடளாவிய ரீதியில் சிவில் உடைகளில் பொலிஸார் கடமைகளில் இருப்பர்” என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## மிதிவெடி அகற்ற...

இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வழிக்காட்டலுக்கு அமைய, இலங்கை பொறியியலாளர் படையணியின் இலங்கை இராணுவ மனிதாபிமான மிதிவெடி அகற்றும் பரிவினர், 2022ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒட்டுமொத்தமாக அடையாளம் காணப்பட்ட மற்றும் அபாயகரமான பகுதிகளில் உள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்காக விரைவாக செயற்பட்டு வருகின்றனர்.

2002ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, இலங்கையில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அரச நிறுவனமான SLADU மொத்த வெடிபொருள் மற்றும் மிதிவெடி பிரதேசமான 1316.65 சதுர கிலோ மீற்றர் பரப்பரவில் 886.19 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் வடக்கில் அபாயகரமான மிதிவெடிகளை அகற்றியுள்ளது.

ஏனைய அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGO) இதுவரை 417.12 சதுர கிலோ மீற்றர் வரையான நிலப்பரப்பில் உள்ள மிதிவெடிகளை அகற்றியுள்ளன.

## ‘அரசாங்கம் பலமடையுமே...

எரிபொருள் விலையேற்றத்தைக் கொண்டு எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அடிப்படைக் காரணிகள் ஏதுமின்றிய வகையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ளார்கள். இதனை சிறந்த முறையில் வெற்றிகொள்வோம் என்றார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில குறைப்பாடுகள் காணப்படுகின்றன. அவைகள் திருத்தப்பட்டுள்ளன. கொவிட் தாக்கத்தை கருத்திற்கொண்டு கடந்த ஒரு மாத காலமாக நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது என்பதற்காக சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தளர்த்தப்படவில்லை. கடுமையான முறையில் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் பயணக் கட்டுப்பாடு தளர்வுக் காலங்களிலும் செயற்படுத்தப்படும். கொவிட் -19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்கு, மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

## ‘ரணில் ஒரு பட்டமரம்’

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களிடையே நேற்று (20) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், எமது கட்சியிலிருந்து 60 பேர், ரணிலுடன் செல்லவுள்ளனர் என்கிறார்கள். எம்மிடம் 45 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்றனர். ஒருவர் பின்னால் ஓடும் அளவுக்கு, எமது உறுப்பினர்களின் நிலை மாறிவிடவில்லை. நாம் வேண்டாமென்று ஒதுக்கிய ஒருவர் பின்னால், மீண்டும் ஓடும் அளவுக்கு எம்மில் எவருக்கும் பைத்தியம் பிடிக்கவில்லை என்றார்.

இதேவேளை,நாட்டின் தற்போதைய நிலையில், அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் போதுமானதாக இல்லை. அவை பிழையான தீர்மானங்களாகும். அதனால் தான் சர்வகட்சி மாநாட்டை நடத்த வேண்டுமென நாம் நினைக்கிறோம். இவ்வாறான நேரத்தில் தான் அரசாங்கம் நாட்டிலுள்ள சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி அவர்களது அபிப்பிராயங்களையும் செவிமடுத்து செயற்பட வேண்டும் என்றார்.

எனவே, இந்த அரசாங்கம் அதனைச் செய்யத் தயாரில்லை என்ற நிலையில், எதிர்க்கட்சி தலைவர் சர்வகட்சி மாநாடு குறித்து மீண்டும் அரசாங்கத்துக்கு நினைவுபடுத்தினார் என்றார்.

## மகனின் சடலத்தைக் கண்டு...

புதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஞானப்பிரகாசம் மைக்கல், அவரின் தாயாரான 70 வயதுடைய ஞானப்பிரகாசம் பாக்கியம் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மகன், புதூர் பிரதேசத்தில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்த நிலையில், இரு தினங்களுக்கு முன்னர் மனைவியுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி, ஜயங்கேணியில் தனிமையில் வாழ்ந்து வரும் அவரது தாயார் வீட்டுக்கு வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், நேற்றுக் காலை 11 மணியளவில் மகனைக் காணவில்லை எனத் தாயார் தேடிய போது, அறைக்கதவு பூட்டப்பட்டு உள்ளதையடுத்து, உறவினர்களின் உதவியுடன் அறைக்கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்துள்ளனர்.

அங்கு தனது உயிரை மாய்த்த நிலையில் மகன் சடலமாக் கிடப்பதைத் தாயார் கண்டுள்ளனார். ஏற்கெனவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த தாயாருக்கு சில மணி நேரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு, அவரும் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த உடல்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## வத்தளை, ஹேகித்தையில் 128 பேருக்கு கொரோனா

“முன்னெடுக்கப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையின் போதே, இவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதியானது” என, வத்தளை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவின் மக்கள் சுகாதார பரிசோதகர் வருண அமரசேகர தெரிவித்துள்ளார்.

அங்கு பணியாற்றும் ஊழியர்களில் 194 பேருக்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன என்பதுடன், அந்த தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களில் 92 பேர் இந்தியப் பிரஜைகளாவர்.

இதேவேளை, அந்த இரும்புத் தொழில்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இனங்காணப்பட்டவர்கள், கொரோனா கிசிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர், அந்த தொழிற்சாலைக்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் பிரபல்யம் வாய்ந்த நிறுவனத்தின் இணை நிறுவனமாக, இந்தத் தொழிற்சாலை கடந்த பல வருடங்களாக, வத்தளை, ஹேகித்த பிரதேசத்தில் இயங்கி வருகின்றது. ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியப் பிரஜைகள் என்பதும் இங்கும் குறிப்பிடத்தக்கது.

## ‘பொறுப்பின்றி மக்கள் நடந்தால்...

வேகமாகப் பரவும் தொற்றால் உயிரிழப்புகள் அதிகமாக ஏற்படக் கூடிய இந்தியாவின் டெல்டா தொற்றும் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள பின்னணியில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அச்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் பிரசாத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பயணக் கட்டுபாடுகள் தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசிய காரணங்களுக்காக அன்றித் தேவையற்ற காரணங்களுக்கு வெளியே செல்ல வேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட அவர், பல வாரங்கள் நாட்டை மூடி வைத்தமைக்கான எதிர்பார்ப்பை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் பொறுப்புடன் செயற்படுவது அவசியம் என்றார்.

தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றமைக்கான காரணம் நாட்டை சில தினங்கள் முடக்கி வைத்திருந்தமையே எனத் தெரிவித்த அவர், எனினும் இன்று பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர், மக்கள் நடந்துகொள்ளும் விதத்துக்கு அமைய, அதன் பிரதிபலன்களை இரண்டு வாரங்களில் தெரிந்துகொள்ளலாம் என்றார்.

பொறுப்புடன் செயற்பட்டால் தொடர்ச்சியாக நாட்டைத் திறக்க முடியும் என்றும் நாம் ஆரம்பத்தில் நாளொன்றுக்கு ஒன்று, இரண்டு மரணங்கள் குறித்துக் கதைத்தோம். பின்னர் அது 10 -15ஆக அதிகரித்து, 25ஆகி தற்போது 50ஐக் கடந்துள்ளது. இவ்வாறான நிலையில், நாம் பொறுப்பின்றி செயற்பட்டால் தினமும் 100 மரணங்கள் பதிவாவதைக் கண்டு ஆச்சரியப்பட முடியாது. பல வாரங்களாக நாட்டை முடக்கி வைத்ததால் ஏற்பட்டுள்ள அழுத்தமே, கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதற்கான காரணம் எனத் தெரிவித்த அவர், எனவே பொறுப்புடன் செயற்படுவது அவசியம் என்றார்.

## இலங்கையர் 34 பேரிடமும் துருவித்...

அவர்களில் நால்வரை மங்களூர் தனிப்படை பொலிஸார் வேதாளை கடற்கரைக்கு அழைத்து வந்து, நேற்று (20) விசாரணை செய்தனர்.

மேலும், தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கை தமிழர்கள், தங்குவதற்கு அடைக்கலம் கொடுத்தவர், தலைமறைவானதால் அவர் குறித்தும் மங்களூர் தனிப்படை பொலிஸார் மரைக்காயர்பட்டிணத்தில் தீவிர விசாரணைகளை நடத்தியுள்ளனர். புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த இலங்கை தமிழர்கள் 34 பேர், சட்டவிரோதமாக கனடா செல்வதற்காக, புத்தளம் கடற்கரையில் இருந்து கடந்த மாதம் 27ஆம் திகதி புறப்பட்டனர். அவர்கள், மறுநாள் அதிகாலை இராமநாதபுரம் மாட்டம் இராமேஸ்வரத்தை அடுத்துள்ள வேதாளை கடற்கரையை வந்து சேர்ந்தனர். பின்னர் வேதாளையில் இருந்து மங்களூர் சென்று கடல் வழியாக கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது, இம்மாதம் 11ஆம் திகதி மங்களூர் பொலிஸாரால் 34 இலங்கை தமிழர்களும் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட 34 இலங்கை தமிழர்களில் நான்கு பேரை மட்டும் பொலிஸ் காவலில் எடுத்த மங்களூர் பொலிஸார், அவர்களிடம் இருந்து முக்கிய ஆவணங்களைத் திரட்டுவதற்காக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழக முதலமைச்சரே....

இதன்போது, அவர்கள், தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டலினின் கவனத்தை ஈர்க்கும் வகையில், அவரின் ஓவியம், படம் ஆகியவற்றைத் தாங்கியவாறு, நேற்றைய (20) போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எந்தத் தீர்வும் கிடைக்காத நிலையில் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ள அவர்கள், இன்றையதினம் (21) தமிழக சட்ட சபை கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் ஒரு தீர்வை, முதலமைச்சர் வழங்குவார் என்று எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

எந்தப் பிரச்சினைகளும் இல்லை

# ‘சஜித்தே எதிர்க்கட்சி தலைவர்’

## அரசாங்கத்தை வெளியேற்ற ரணில் ஒத்துழைக்க வேண்டும்

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வருவதால், ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை எனத் தெரிவித்த ஐ.ம.சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவே தொடர்ந்தும் செயற்படுவார். சஜித்தை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கோ அல்லது, அவர் எதிர்க்கட்சித் தலைவர் இல்லை என்கிற நிலைப்பாட்டிலோ ஐக்கிய மக்கள் சக்தியில் எவரும் இல்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வருவதால், எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை எனத் தெரிவித்த ராஜித சேனாரத்ன, எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்தை வெளியேற்ற ரணில் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

ரணிலுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைவார்களெனத் தெரிவிக்கப்படுவதில் எந்தவிதமான உண்மைகளும் இல்லை. ரணிலுடன் இருக்கும் ‘டீல்’ காரர்களே இவ்வாறான பொய்களைக் கூறி வருகிறார்கள்.

ரணிலுடன் இருப்பவர்கள், அரசியல் என்றால் ‘டீல்’ செய்வதென நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ரணிலின் தற்போதைய நிலைக்கு இந்த ‘டீல்’ காரர்களே காரணம். இதை ரணில் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# 18 நாள் சிசுவின் உயிரை பறித்தது கொரோனா



மினுவாங்கொடை, பில்லவத்த பிரதேசத்தில் பிறந்து 18 நாள்களேயான சிசுவொன்று, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளதாக மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் அறிவித்துள்ளது.

பிறக்கும்போதே குறைபாடுகளுடன் பிறந்த இந்தச் சிசு, நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், இம்மாதம் 18ஆம் திகதி உயிரிழந்துள்ளது. இந்நிலையில், சிசுவுக்கு மேற்கொள்ளப்பட்ட ‘ரெபிட் அன்டிஜன்’ பரிசோதனையில், கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிசுவின் தந்தைக்கும், தாய்க்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில், அவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படவில்லை எனவும் வைத்தியதிகாரி காரியாலயம் அறிவித்துள்ளது.

சிசுவின் தாய், தந்தை உள்ளிட்ட அவர்களது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வு?

# மாணவர்களுக்கு அவதி



எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டு உள்ளதால், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமென அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுடன் தமக்கிருக்கும் நல்லுறவாலேயே இந்தச் சேவையைத் தொடர்ந்து முன்னெடுப்பதாகவும், எவ்வாறாயினும் சுப்பர் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதே தமக்குள்ள பாரிய பிரச்சினை எனவும் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும், குறைந்தளவிலான மாணவர்களே பாடசாலைகளுக்கு செல்வார்கள். இவ்வாறு குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களை ஏற்றிச் செல்வது நட்டமாகும்.

விஞ்ஞான பூர்மான அமைச்சரவையே நியமித்துள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். இதனால் மக்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. சுப்பர் டீசலின் விலையைக் குறைக்கவில்லை என்றால், மாணவர்களுக்கு போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியுமா என்கிற சந்தேகம் ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின்

# ‘அனைத்து தீர்மானங்களையும் ஏற்க முடியாது’



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களில் நியாயமில்லை எனத் தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரன, அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்தாலும், அரசாங்கத்தின் அனைத்துத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம், அரசாங்கத்தின் தீர்மானமெனவும் கூறிய அவர், எரிபொருள் விலை அதிகரிப்புத் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கையெழுத்திட்டு உள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்தே அதிகளவான எம்.பிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பது உண்மை. ஆனால், அரசாங்கத்துக்குள் உள்ள ஏனைய கட்சிகளுக்கும் கௌரவமளிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகத் நாம் இருந்தாலும், அரசாங்கம் எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் உடன்படப் போவதில்லை. உதய கம்மன்பிலவுக்கு எதிரான சாகர காரியவத்தின் அறிக்கை, அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிக் கொள்கைகளுக்கு எதிரானது எனவும் அவர் தெரிவித்தார்.

எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்;

# கொழும்பில் இன்று உயர்மட்டக் கூட்டம்

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பிடித்து எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் கலந்துரையாடும் உயர்மட்டக் கலந்துரையாடலொன்று இன்று (21) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

நீதி அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில், நீதியமைச்சில் நடைபெறும் இக்கலந்துரையாடலில், தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிபுணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான சேவை தொடராது;

# ரயில் சேவைகள் இன்று ஆரம்பம்



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, இடைநிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகள், இன்று முதல் மீள ஆரம்பிக்கப்பட உள்ளன. இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான ரயில் போக்குவரத்துச் சேவை, மறுஅறிவித்தல் வரைக்கும் நிறுத்தப்பட்டுள்ளது. முதற் கட்டமாக மேல் மாகாணத்துக்குள் மாத்திரம் ரயில் சேவையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று காலையிலும் மாலையிலும் அலுவலக ரயில் சேவையில் 34 சேவைகள் நடைபெறவுள்ளன.

இதற்கு மேலதிகமாக, கண்டி, அநுராதபுரம், மாகோ, பொல்கஹவெல ஆகிய இடங்களுக்கு தலா ஒரு ரயில் சேவை என்ற அளவில் நடைபெறும். அத்தியாவசிய சேவையில் ஈடுபட அனுமதி பெற்றுள்ளவர்கள் மாத்திரம் ரயில் சேவையைப் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை, பயணிகள் அனைவரும் கடுமையான முறையில் பின்பற்ற வேண்டும். ரயில் பெட்டிகள், ரயில் நிலையங்கள் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளன. ரயில் நிலையங்களில் கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்ட சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தொடர்ச்சியான முன்னெடுக்கப்படும்.

எரிபொருள்களின் விலையைக் குறைக்குமாறு

# மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

எம்.இஸட்.ஷாஜஹான்

எரிபொருள்களின் விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தி, நேற்று (20) காலை நீர்கொழும்பு முன்னக்கரை பிரதேச, கொத்தலாவல பாலம் அருகில் மீனவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை, அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எரிபொருள்களின் விலையைக் குறைக்குமாறும் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் வலியுறுத்தி சுலோகங்களை ஏந்தி, கோசங்களையும் எழுப்பினர்.

நீர்கொழும்பு மாநகர சபையின், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் காமினி பெர்ணாந்து, அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் அளுத்கூறுவ கிளையின் செயலாற்றுக் குழு உறுப்பினர் கெமிலஸ், ஜாதிக்க ஜனபலவேகய ‘வித்வத்’ அமைப்பின் நீர்கொழும்புக் கிளைத் தலைவர் வைத்தியர் ஹென்ரி ரொஸைரோ ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துகளைத் தெரிவித்தனர்.




# வன்னேரிக்குளம் உடைப்பெடுத்தது

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தின் தென்பகுதியில் உடைப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன், இந்நிலையில், விவசாயிகளால் மண் மூடைகள் அடுக்கப்பட்டு, குளத்தில் இருந்து நீர் வெளியேறாமல் பாதுகாக்கப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வன்னேரிக்குளத்தின் தென்பகுதியில் இருந்து, ஆறு வழியாக நீர் வெளியேறாமல் இருப்பதற்காக, கடந்த காலங்களில் மண் மூடைகள் அடுக்கப்பட்டதுடன், மண் அரண்களும் அமைக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த இடத்தில் தற்போது உடைவு ஏற்பட்டதால், நேற்று முன்தினம் (19) விவசாயிகளால், மண் மூடைகள் அடுக்கப்பட்டு, குளத்தில் இருந்து நீர் வெளியேறாமல் பாதுகாக்கப்பட்டு உள்ளதெனவும், அவர் கூறினார்.


## விலைமனுக் கோரல் விளம்பரம்

### வாரியபொல பிரதேச சபை

வாரியபொல பிரதேச சபைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் பெறுவதற்காக விலைமனுக் கோரலை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அதற்கான விலைமனுக் கோரலை 2021 ஜூலை மாதம் 14 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக பதிவு தபாலிலோ அல்லது கையில் கொண்டுவந்து டென்டர் பெட்டியில் இட முடியும்.

01. வீதி விளக்கு உபகரணம் (மாதிரி மற்றும் உத்தரவாத காலத்தை குறிப்பிடப்படல் வேண்டும்)
02. கணணி இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள்
03. அச்சிடும் இயந்திரம் மற்றும் அதற்கு உரித்தான உதிரிப்பாகங்கள்
04. பிரதி நகல் இயந்திரம் மற்றும் அதற்கு உரித்தான உதிரிப்பாகங்கள்
05. 53-6121 கெப் ரக வண்டியை புதுப்பித்தல்
06. 227-1752 என்ற ISUZU டிபர் வண்டியை புதுப்பித்தல்
07. MITSUBISHI 31 ශ්‍රී 2016 என்ற ஜீப் வண்டியை புதுப்பித்தல்
08. சீமெந்து 50 கிலோ கிராம் பொதியின் விலை
09. கட்டிடம் நிர்மாணிப்பதற்கான பொருட்கள்
10. வாகணங்களுக்கான டயர் டியுப் மற்றும் பெட்டரி (மாதிரி மற்றும் உத்தரவாத காலத்தை குறிப்பிடப்படல் வேண்டும்)
11. சுகாதார உபகரணங்கள் (கையுறை, பூட் மற்றும் சவர்கார வகைகள் உட்பட சுத்திகரிப்பு வகைகள்)
12. சகலவித அளவிலான பீவீசீ குழாய்கள்
13. நிலக்கல்
14. நிலக்கல் தயாரிப்பதற்கான இயந்திரத்தின் விலை (மாதிரி மற்றும் உத்தரவாத காலத்தை குறிப்பிடப்படல் வேண்டும்)
15. தயார் நிலை கொங்கிரீட் களவை பெற்றுக்கொள்ளல்

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

2021.06.18
வாரியபொல பிரதேச சபை
037 – 2267275

தலைவர்
டீ.எம்.டி.பி. திசாநாயக்க
வாரியபொல பிரதேச சபை



## வாரியபொல பிரதேச சபை

### 2022 வருடத்துக்கான வரவு-செலவுத் திட்ட யோசனையை பெற்றுக்கொள்ளல்.

1989 இலக்கம் 12 மாகாண (துனை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் வாசிக்கக்கூடிய 1987 இலக்கம் 15 ஐக் கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 184 ஆவது பிரிவில் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநரான ராஜா கொலுரே அவர்களினால் 2020.10.29 ஆம் திகதி மற்றும் இலக்கம் 2199/15 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டத்தை வழங்கி மற்றும் செயற்பட்டுவதற்கான சட்ட இலக்கம் 06இன் பிரகாரம் வாரியபொல பிரதேச சபையின் தலைவரான என்னால், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்காக மூலதன செலவுகளை திட்டமிடுவதற்கு மற்றும் அபிவிருத்திகளை திட்டமிடுவதற்கு தேவையான யோசனைகள் மற்றும் கருத்துக்கள் (அபிவிருத்தி யோசனைகள்) மக்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

உங்களுடைய 2022 ஆம் ஆண்டுக்கான அபிவிருந்தி யோசனைகள் 2021.06.30 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கும் வகையில், தபாலிலோ அல்லது நேரடியாக கொண்டுவந்து கொடுக்கலாம் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

2021.06.15
வாரியபொல பிரதேச சபை
037-2267275

தலைவர்.
டீ.எம்.டி.பீ. திஸாநாயக்க.
வாரியபொல பிரதேச சபை

இறந்த ஆமைகளும் டொல்பின்களும்

# கிழக்கில் கரையொதுங்கின

## மீனவர் வாழ்வாதாரம் திண்டாட்டம்

வ.சக்தி, வா.கிருஸ்ணா, எம்.எஸ்.எம். நூர்தீன், நூருள் ஹுதா உமர்





கிழக்கு மாகாணக் கடற்கரைகளிலும் இறந்த ஆமைகளும் டொல்பின்களும் கரை ஒதுங்குவதால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இறந்த ஆமைகளும் டொல்பின்களும் கரை ஒதுங்குவதால் மீன்களை வாங்க மக்கள் அச்சப்படுவதால், மீன் வியாபாரிகள் திண்டாடுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தமது கடற்பகுதியில் சிலரால் மேற்கொள்ளப்படும் சுருக்கு வலை மீன்பிடிக்கு மத்தியில், தாம் அன்றாடம் செய்து வரும் மீன்பிடித் தொழில், தற்போதைய கொரோனா முடக்கத்தால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், தீப்பிடித்து எரிந்த எம். வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பாதிப்புகள், தமது கடற்பிராந்தியத்திலும் தென்பட்டுள்ளதால், தாம் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக களுதாவளை, கல்லாறு, களுவாஞ்சிகுடி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தெரிவிக்கின்றர்.

மட்டக்களப்பு, கிரான்குளம் பகுதியில் உயிரிழந்த நிலையில் இரண்டு கடல் ஆமைகளும் டொல்பினும் சனிக்கிழமை (19) கரையொதுங்கியதுடன், காத்தான்குடிக் கடற்கரையிலும் இறந்த ஆமையொன்று அன்றையதினம் கரையொதுங்கியிருந்தது.

மேலும், அம்பாறை, கல்முனை மாநகர, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு பிரதேச கடற்கரையோரங்களில் மூன்று இறந்த கடலாமைகள், சனிக்கிழமை (19) கரை ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## செங்கல் ஏற்றிய டிப்பர் விபத்து

வி.ரி.சகாதேவராஜா

பயணக் கட்டுப்பாட்டுக்கு மத்தியில் செங்கல் ஏற்றி வந்த டிப்பர் வாகனமொன்று, காரைதீவு -சம்மாந்துறை பிரதான வீதியில் வைத்து வயலுக்குள் குடைசாய்ந்து நேற்று (20) காலை விபத்துக்குள்ளானது.

டிப்பரில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே வீதியை விட்டு விலகி வயலுக்குள் குடைசாய்ந்துள்ளது. இதில் சாரதி உள்ளிட்ட எவருக்கும் எவ்வித பதிப்பும் ஏற்படவில்லை.

மோட்டார் சைக்கிள் விபத்து;

## திருடியவர் காயங்களுடன் தலைமறைவு

எச்.எம்.எம்.பர்ஸான்



விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளைக் கைவிட்டுவிட்டு, அதனைச் செலுத்திச் சென்ற நபர், காயங்களுடன் தலைமறைவாகியுள்ள சம்பவமொன்று, திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான நபரை, பொலிஸாரின் உதவியுடன் சேருநுவர வைத்தியசாலையில் பிரதேச மக்கள் அனுமதித்துள்ளனர்.

எனினும், காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட அந்நபர், வைத்தியசாலையில் இருந்து தலைமறைவாகி உள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சேருநுவர பொலிஸார், தலைமறைவாகிய நபர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டது என்றும் அது கடந்த 14ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காணாமல் போன பல்சர் மோட்டார் சைக்கிள் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உண்டியலை உடைத்தவர் ஹெரோய்னுடன் கைது



எம்.எம்.அஹமட் அனாம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி பிரதேச ஜும்ஆப் பள்ளிவாசல் உண்டியல், சில தினங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டிருந்தது.

இந்த உண்டியலில் இருந்த பணத்தைத் திருடிய சந்தேகத்தின் பேரில் 20 வயதுடைய இளைஞன், ஹெரோய்ன் போதைப்பொருளை கைவசம் வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு, சமூகச் செயற்பாட்டாளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் வாழைச்சேனைப் பொலிஸாரின் உதவியுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனிடமிருந்து சுமார் 2,250 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டு உள்ளது. சந்தேகநபர், பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்தவர் என்றும் ஏறாவூரில் திருமணம் முடித்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளிவாயல் உண்டியலை உடைத்துத் திருடியமை தொடர்பிலும் போதைப்பொருளை வைத்திருந்தமை தொடர்பிலும் வாழைச்சேனைப் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

## பெரியகல்லாறு முடக்கம்

கனகராசா சரவணன், எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய கல்லாறு கிராமசேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் ஆறு கிராமசேவகர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 519 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் இருக்கின்றனர் எனவும் மாவட்டச் செயலாளர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

மாவட்ட கொரோனா தடுப்புச் செயணி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அறிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது தொற்றாளர்கள் அதிகரித்துவரும் நிலையிலே பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார முறைகளை எவ்வாறு முன்னெடுப்பது என ஆராயப்பட்டு, மேற்படிகூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 100 பேர் என்ற வீதத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். வெள்ளிக்கிழமை (18) 232 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடு நீங்கினாலும்

## 'தனிமைப்படுத்தல் தொடரும்'

எம்.எஸ்.எம். ஹனீபா



பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும் கிழக்கு மாகாணத்தில் தனிமை -ப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் இருக்குமென, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக், நேற்று (20) தெரிவித்தார்.

அத்துடன், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சமூக இடைவெளியைப் பேணும் முகமாக அதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமெனவும், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

அத்தியவசியத் தேவைக்காக வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரமே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வெளியில் செல்ல வேண்டுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர்

# டக்ளஸுக்கு எதிராக குற்றச்சாட்டு

டி.விஜித்தா



தங்களிடம் எந்தவிதமான ஆலோசனைகளையும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்பதில்லையென்று, வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, "அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலுக்குள் பஸ்களை இறக்குவதற்கு முன்னர், உங்களிடம் ஆலோசனை கேட்டாரா" என, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்துரைத்த அவர், "எல்லாம் எனக்குத் தெரியும். நான் இதில் அனுபவம் மிக்கவர்" என்று, ஏற்கெனவே அமைச்சர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதன் காரணமாக, அவர் எங்களிடம் அபிப்பிராயம் கேட்பதுமில்லை. எங்களுடைய அபிப்பிராயத்தைச் செவிமடுப்பதும் இல்லை" என்று கூறினார்.

தான் அந்த பஸ்களைப் பார்வையிட்டதாகத் தெரிவித்த வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர், அது, கோது போல உள்ளதுடன், கீழ்ப்பகுதி பாரமற்றும் காணப்படுகிறது. கடலில் இறக்கப்பட்ட அந்தப் பஸ்கள், நிலையாக இருக்குமாக இருந்தால், அதன் பயன் குறுகிய காலத்தில் தங்களுக்கு கிடைக்குமென்றும் ஆனால், அது காற்றாலோ வேறு காரணங்களாலோ நகருமாக இருந்தால், அதைப் போட்டதில் எந்தவிதமான பிரயோசனமுமில்லை என்றும், தெரிவித்தார்.

இந்தியாவில் மல்லி பட்டினத்துக்கு நேராக, செயற்கை கடல் உருவாக்கப்பட்டு வருகின்றது. ஆழிக் கடலிலே இருந்து கப்பல் மூலம் பாரிய பாறைகளைக் கொண்டுவந்து அங்கே போட்டு, செயற்கையாக மீன் வாழும் இடங்கள் உருவாக்கப்படுகின்றன. அது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. ஏனென்றால், அந்தப் பாறைகள் அரக்காது இருந்து, மீன்கள் அதில் வளரும்.

பஸ்களை கடலில் இறக்கும் நடவடிக்கையால், முழுமையான பயனை அடைய முடியுமா என்பதை, சூறாவளிகளும் சுழல் காற்றுகளும் வருவதை வைத்துத்தான் கணிப்பிட முடியும் என்றும், அவர் கூறினார்.

மன்னாரில் இன்று

## 'தனியார் போக்குவரத்து சேவை இடம்பெறும்'

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னாரில் இருந்து வடக்கு மாகாணத்துக்கான தனியார் போக்குவரத்து சேவை, சுகாதார நடைமுறைகளுடன், இன்று (21) முன்னெடுக்கப்படும் என்று, மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இன்று (21) அதிகாலை, பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படவுள்ள நிலையில், மன்னாரில் இருந்து வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் தனியார் போக்குவரத்து சேவை இடம்பெறும். அத்துடன், வடமாகாணத்தைத் தவிர, ஏனைய மாகாணங்களுக்கு இடையில் சேவைகள் இடம்பெறாதெனவும், அவர் தெரிவித்தார்.

உணவுப் பொருள்களை வழங்குவோர்

## 'கிராம அலுவலருடன் தொடர்புகொள்ளவும்'

நடராசா கிருஸ்ணகுமார்

பொதுமக்கள் அனைவருக்கும், உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டுமெனத் தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ந.கேதினி, உணவுப் பொருள்களை வழங்க வருபவர்கள், கிராம அலுவலருடன் தொடர்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், உணவுப் பொருள்கள் ஒழுங்கின்றி விநியோகிக்கப்படுவதன் காரணமாக, பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. சில குடும்பங்களுக்கு இரு தடவைகள் கூட உணவுப் பொருள்கள கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், சில குடும்பங்கள் உணவுப் பொருள்களையே பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் காணப்படுகின்றன எனவும் சாடினார்.

"எனவே, உணவுப் பொருள்களை வழங்க வருபவர்கள், கிராம அலுவலருடன் தொடர்புகளை ஏற்படுத்தி, உணவுப் பொருட்களை வழங்கினால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் உணவுப் பொருள்கள் சென்றடையும். அவ்வாறு இல்லாமல், தன்னிச்சையாக உணவுப் பொருள்களை வழங்கினால், உண்மையான நிலைவரப்படி உணவுப் பொருள்கள் சென்றடையாது" எனவும், ந.கேதினி தெரிவித்தார்.

இலுப்பைக்கடவையில்

## ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

எஸ்.றொசேரியன் லெம்பேட், சண்முகம் தவசீலன்

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை பகுதியில், மக்கள் குடியிருப்பில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள மீன் பண்ணை தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இச்செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்த இளைஞர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலுப்பைக்கடவை பகுதியில், மக்கள் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள நண்டு, அட்டை, மீன் உள்ளடங்கலாக பல பண்ணைகள், உரிய பாதுகாப்பு இன்றியும் பராமரிப்பு இன்றியும் காணப்படுகின்றன.

இது தொடர்பாக, அப்பகுதி மக்கள் தொடர்ந்து குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்ற நிலையில், அது தொடர்பில், மன்னார் மாவட்டப் பிராந்திய ஊடகவியாலாளர் ஒருவர், நேற்று முன்தினம் (19), அப்பகுதிக்கு நேரடியாகப் பார்வையிட்டு, செய்தி சேகரிப்பதற்காகச் சென்றுள்ளார்.

இதன்போது, குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்தும் வகையில், இலுப்பைக் கடவை மீனவ சங்கத் தலைவரும் மேற்படி பண்ணையின் உரிமையாளரும் செயற்பட்டுள்ளனர்.



அத்துடன், அவர்களுடன் சிலர் இணைந்து ஊடகவியலாளரை அச்சுறுத்தியதுடன், கமெராவில் எடுக்கப்பட்ட புகைப்பட ஆதாரங்களை அழிக்குமாறும் வற்புறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், அப்பண்ணையால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் சிலர், இச்செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததை தொடர்ந்து, அவ்விளைஞர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, இச்சம்பவம் தொடர்பாக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலுப்பைக்கடவை தொழில்சார் முரண்பாடு:

## 'சுமூகமான தீர்வு பெற்றுத்தரப்படும்'

நடராசா கிருஸ்ணகுமார்



இலுப்பைக்கடவை கடற்றொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் தொழில்சார் முரண்பாடுகளுக்கு, சுமூகமான தீர்வு பெற்றுத்தரப்படும் என்று, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

மன்னார், இலுப்பைக்கடவை பகுதிக்கு, நேற்று முன்தினம் (19) விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதேச கடற்றொழிலாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே, அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

இது குறித்து தொடர்ந்துரைத்த அவர், இலுப்பைக்கடவை கிராமத்தில், கடலட்டைப் பண்ணை அமைத்தல், நண்டு வளர்த்தல் போன்ற திட்டங்கள் தொடர்பாக, மக்கள் மத்தியில் இருவேறான கருத்துகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, மக்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதை விரும்பாத சில சுயலாப சக்திகள், இலுப்பைக்கடவை மக்களில் ஒரு பகுதியினருக்கு, கடலட்டை உற்பத்தி தொடர்பாகத் தவறான புரிதலை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

எனவே, குறுகிய நோக்கங்களுக்காக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த முரண்பாடு, சுமூகமாகத் தீர்க்கப்பட்டு, குறித்த கிராம மக்கள், யாருடைய ஒத்துழைப்புகளையும் எதிர்பார்க்காமல் வாழக்கூடிய வாழ்வாதாரமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும், டக்ளஸ் உறுதியளித்தார்.




# கொரோனா செய்தி துளிகள்...

1. கினிகத்தேனை, கெனில்வேர்த் தோட்டத்திலுள்ள இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்து. குறித்த தோட்டத்திலுள்ள இரண்டு குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (இரா. யோகேசன்)

2. திம்புளைபத்தனை பொலிஸ் பரிசோகர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார். (ரஞ்சித் ராஜபக்ஸ)

3. ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (19) 24 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், இதில் எட்டுப் பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (சுதத்.எச்.எம்.ஹேவா)

4. ஹட்டன் நீதவான் நீதிமன்றில் கடமையாற்றி வந்த சட்டத்தரணியொருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்ததை அடுத்து, ஹட்டன்- ஆரியகம பிரதேசத்திலுள்ள மூன்று குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (சுதத்.எச்.எம். ஹேவா)

5. தலவாக்கலை, கிரேட்வெஸ்டன் தோட்டத்திலும் 13 பேரும் கட்டுகலை தோட்டத்தில் ஆறு பேரும் தெவிசிறிபுர பகுதியில் ஐந்து பேரும் புதிய தொற்றாளர்களாக நேற்று முன்தினம் (19) அடையாளம் காணப்பட்டுள்ளனர். (பி. கேதீஸ்)

6. புளத்கொஹுபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட லேவல, கெந்தேவ, புளத்கொஹுபிட்டிய, ஹாதாகொட ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 91 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.( என். ஆராச்சி)

சட்டவிரோத மதுபான உற்பத்திகளை

# ‘கட்டுப்படுத்தவும்’

ஆ.புவியரசன்

அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பெருந்தோட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மதுபான உற்பத்தியைத் தடுக்க, கலால் திணைக்களமும் பொலிஸாரும் முன்வரவேண்டுமென, விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆர்.எம். கிருஸ்ணசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

“பயணக் கட்டுப்பாடுகளால் மதுபான நிலையங்களை மூடுவது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனாலும், இதைக் காரணமாக வைத்து, பதுளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டங்களில் சட்டவிரோத



மதுபான உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதனால், இந்தச் சட்டவிரோத மதுபானங்களைத் தேடி, பலர் தோட்டங்களுக்குப் படையெடுப்பதால், தோட்டப்புறங்களில் கொரோனா தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும், வருமானமற்ற ஆண்களும் இந்த மதுபோதைக்கு அடிமையாவதால், குடும்பங்களில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.







## இரத்த தானம்...

கந்தப்பளை ஸ்ரீ ஜிநேன்ரா ராமய விகாராபதி தம்பகொல்லே சோமானந்த தேரரின் 51ஆவது பிறந்த தினத்தையொட்டி, தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, கந்தப்பளை ஸ்ரீ ஜிநேன்ரா விகாரையில் நேற்று (20) இரத்த தானம் நிகழ்வு நடைபெற்றது. (நீலமேகம் பிரசாத், ஆ.ரமேஸ்)

சட்டவிரோத மதுபானத்துடன்

## மோராவில் இருவர் கைது

எஸ். சதீஸ்

பொகவந்தலாவை, மோரா தோட்ட கீழ்ப்பிரிவில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர், பொகவந்தலாவை பொலிஸாரால் நேற்று முன்தினம் (19) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 1,70,000 மில்லி லீற்றர் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களை, ஹட்டன் நீதவான் நீதிமன்றில் நாளை (22) ஆஜராகுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.



அரசாங்கத்தின் முடிவால்

# ‘மரக்கறி செய்கைக்கு பாதிப்பு’

ஆ.ரமேஷ்

அசேதன பசளைக்கு உற்பத்திகள் பழக்கப்பட்டு உள்ளதால், மண் வளத்தை சேதனப் பசளைக்கு மாற்றி, மண்ணை வளப்படுத்த குறைந்தது 2 வருடங்களேனும் செல்லும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் நீதித்துறை பிரதி அமைச்சர் வீ.புத்திரசிகாமணி, “அதுவரை நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி உற்பத்திக்கு பாதிப்புகள் காத்திருக்கின்றன” என்றார்.

காலம் அறியாது அரசாங்கத்தின் அசேதனப் பசளைத் தடையானது, எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் பின்னர், நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி செய்கை பாதிக்கப்படுவது உறுதி. அசேதனப் பசளை பற்றாக்குறை குறித்து, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,நுவரெலியா மாவட்டத்தில் 85 சதவீதமானவர்கள் மரக்கறி உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். நாடு



பூராகவும் உள்ள சந்தைகளுக்கு நுவரெலியாவிலிருந்து பெருந்தொகை மரக்கறிகள் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த நிலையில், அசேதனப் பசளைக்குத் தட்டுப்பாட்டை உருவாக்கி, அசேதனப் பசளை இறக்குமதியை நிறுத்தி, விவசாயத்துறையின் எதிர்காலத்தை அரசாங்கம் கேள்விக்குறியாக்கி உள்ளதென்றார்.

எனவே, அரசாங்கம் இது குறித்து கவனம் செலுத்தி, நுவரெலியா மாவட்டம் மட்டுமின்றி அனைத்துப் பிரதேச விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அசேதனப் பசளை இறக்குமதிக்கு உடனடி தீர்வை எடுக்க வேண்டும் என்றார்.

பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை

## ‘பணிக்குச் செல்லமாட்டோம்’

### சூரியகாந்தி தோட்ட மக்கள் சூளுரை

ஆ. ரமேஸ்

மத்துரட்ட பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இராகலை, சூரியகாந்தி தோட்டத்தின் ஐந்து பிரிவுகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், தொழிலில் ஈடுபடும் போது, தமது தொழில் பாதுகாப்பு உரிமையை தோட்ட நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டுமெனத் தெரிவித்து இரண்டாவது நாளாகவும் நேற்று (20) பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இத்தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர், தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். பாதுகாப்பற்ற முறையில் தொழிலில் ஈடுபட்ட போதே இவர் உயிரிழந்துள்ளதுடன், இதேபோல் பல சம்பவங்கள் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் பாதுகாப்பற்ற முறையில் வேலை வாங்குவதாகவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு தொழிலில் ஈடுபட்ட நிலையில், பாதிப்புக்குள்ளாகும் தொழிலாளர்களுக்கு எவ்வித நட்டஈட்டையும் வழங்க தோட்ட நிர்வாகம் முன்வருவதில்லை என்றும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தமது தொழில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பது தொடர்பான உரிய தீர்வை, தோட்ட நிர்வாகம் வழங்கும் வரை பணிக்குச் செல்லமாட்டோம் என, சூரியகாந்தி தோட்டத்திலுள்ள ஐந்து பிரிவுகளிலுள்ள தொழிலாளர்களால் நேற்று முன்தினம் (19) ஆரம்பித்த பணிப் பகிஷ்கரிப்பு நேற்று வரை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.



இரண்டு மாதங்களாக சம்பள நிலுவை

## உடபாக தொழிலாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கை

அருள்ஷான்

தெரணியகல, உடபாக தோட்டத்தில் நாளாந்தம் வேலை செய்யும் கைக்காசு தொழிலாளர்களுக்கு, கடந்த இரண்டு மாதங்களாகச் சம்பளம் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று (20) அத்தோட்ட மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



அத்துடன், தாம் தொழில் செய்யும் இடங்கள், உரிய பராமரிப்பின்றிக் காடுகளாக மாறியுள்ளதாகவும் தோட்ட நிர்வாகம், இது குறித்து அலட்சியமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கொரோனா முடக்க 5,000 ரூபாய் கூட, தமக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கும் இம்மக்கள், தொழிலாளர்களின் விருப்பமின்றி தொழிற்சங்கங்களுக்கான சந்தாவையும் நிர்வாகம் பலவந்தமாக நிறுத்தியுள்ளன எனவும் தெரிவித்தனர்.

சேதமடைந்துள்ள

## வேவெஸ்ஸ பாலத்தை புனரமைக்க கோரிக்கை

ந. மலர்வேந்தன்

பதுளை, வேவெஸ்ஸ தோட்டத்தின் தெபேவத்த பிரிவுக்குச் செல்லும் நடைபாதை பாலமொன்று மூன்று வருடங்களாக சேதமடைந்துள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்னர், குறித்த பாலத்துக்கு அருகிலிருந்த பாரிய மரமொன்று தோட்ட நிர்வாகத்தால் வெட்டப்பட்ட போது, பாலத்தின் மீது மரம் விழுந்ததால் பாலம் சேதமடைந்தது.

அத்துடன், பாலத்துக்குக் கீழே காணப்படும் கற்களும் அவ்வப்போது சரிந்து விழுகின்றன. இப்பாலத்தை புனரமைக்க தோட்ட நிர்வாகம் இதுவரை நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பாலத்தைப் பயன்படுத்தும் மக்கள், பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கும் இந்த விடயத்தைக் கொண்டு வந்துள்ளனர்.



எனினும் ,இதுவரை எவரும் இப்பாலத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ள வேவஸ்ஸ தோட்ட மக்கள், பாலத்தை உடனடியாக புனரமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நாளை நாடு திரும்புகிறார் திகா

மருத்துவ சிகிச்சைகளுக்காக வெளிநாடுக்குச் சென்றிருந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், நாளை (22) நாடு திரும்ப உள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.



வெளிநாட்டில் சிகிச்சை பெற்று நாடு திரும்பும் அவர், சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய தன்னை தனிமைப்படுத்திக்கொண்டு, அதன் பின்னர் அரசியல் பணிகளில் மும்முரமாக ஈடுபட உள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச சபைகளுக்கான ஆயுட்காலம் இந்த வருட இறுதியில் நிறைவடையும் என்பதால், பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் தற்போதே பழனி திகாம்பரம் தயாராக உள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசளை கோரி

## மாத்தளை, பதுளையில் எதிர்ப்பு நடவடிக்கை

மஹேஸ் சேனாரத்ன, பாலித ஆரியவன்ஸ

நாட்டில் அசேதனப் பசளை இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளதால், அசேதன பசளையை நம்பி விவசாயம், தேயிலை போன்ற உற்பத்திகளில் ஈடுபட்டவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, குறிப்பிட்ட காலத்துக்குள் தமது உற்பத்திகளுக்கு அசேதனப் பசளையைப் பயன்படுத்த முடியாமையால், உற்பத்திகள் அழிவடைவதாகவும் நாடு முழுவதும் அசேதனப் பசளை கோரி எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில், தேயிலை உற்பத்திக்கு அசேதனப் பசளையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து, மாத்தளை, எல்கடுவ பிரதேச சிறு தேயிலைத் தோட்ட உற்பத்தியாளர்களால் நேற்று முன்தினம் (19) எதிர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

பசளை இன்மையால், தேயிலைச் செடிகள் அழிவடைவதுடன், தேயிலை உற்பத்தியும் வீழ்ச்சியடைந்து உள்ளதாகவும், கொரோனா தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சியும் பாரிய தாக்கத்தைத் தமக்கு ஏற்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தே, இவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அமைதியாக, சுலோகங்களை ஏந்தியவாறு எல்கடுவ நகரம் வரை பேரணியாகச் சென்றனர். இதனை சிறு தேயிலை தோட்ட பாதுகாப்பு மக்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

இதேவேளை, பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேசத்திலும் பசளை வழங்குமாறு, நேற்று (20) எதிர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

சேதனப் பசளையைப் பயன்படுத்துவதற்கு தாம் எதிர்ப்பு இல்லையென்றும், எனினும் ஒரு தடவையாவது தமது உற்பத்திகளுக்கு பழக்கப்பட்ட அசேதனப் பசளையை வழங்குமாறும் இவர்கள் கேட்டுக்கொண்டனர்.





# ஒரிரு பிரிவினருக்கு மட்டுமே அமலான ‘முழங்காலிடல்’ சட்டம்

பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, 31 நாள்கள் நிறைவடைந்த நிலையில், முழுநாடும் சில வரையறைக்குள் இன்றுகாலை நான்கு மணியளவில் விடுவிக்கப்படுகின்றது. எப்பொழுது விடியுமென்ற எதிர்பார்ப்பில், பலரும் நித்திரைக்குச் சென்றிருந்தனர்.

இந்தப் பயணக்கட்டுப்பாடுகள் அமலிலிருந்த நாள்களில், கட்டுப்பாடுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர். இன்னும், சிலர் அறிவுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர். பலருடைய வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆக, கட்டுப்பாடுகளை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்டம், சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டு உள்ளதாக சொல்லப்படுகின்றது.

ஏககாலத்தில், ‘அத்தியாவசிய சேவைகள்’ என்று அச்சடிக்கப்பட்ட கடதாசியை, வாகனத்தின் முன்கண்ணாடியில் ஒட்டிக்கொண்டு, அங்குமிங்கும் சுற்றித் திரிந்த வாகனங்களையும் பாதுகாப்புப் பிரிவினர் அடையாளம் கண்டிருந்தனர். கொழும்பு, உள்ளிட்ட சில பிரதான நகரங்களில், வாகனப் போக்குவரத்து நெரிசல்களும் ஏற்பட்டிருந்தன.

இவை தொடர்பிலான தகவல்களும் புகைப்படங்களும், சமூக வலைத்தளங்களில் பதிவாகியிருந்தன. ஆக, நாடளாவிய ரீதியிலான பயணக்கட்டுப்பாடு என்றால் என்ன? எனக் கேள்வி கேட்கும் அளவுக்கு, ‘கட்டுப்பாடுகள்’ எனச் சொல்லப்பட்ட பயணக்கட்டுப்பாடுகள் அமைந்திருந்தன.

ஆனால், மட்டக்களப்பு, ஏறாவூரில் பயணக்கட்டுப்பாடுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில், சிலரைப் பிடித்த இராணுவத்தினர், அவர்களை வீதியோரங்களில் முழங்காலிடச் செய்திருந்த புகைப்படங்கள், சமூக வலைத்தளங்களில் வைரலாகி, ‘ஒரே நாடு- ஒரே சட்டம்’ என்பதைக் கேள்விக்கு உட்படுத்திவிட்டது.

அப்பாவி மக்களின் மீது, காட்டுமிராண்டித்தனமாகத் திணிக்கப்பட்ட, எழுதப்படாத சட்டங்களைக் கையில் எடுப்பதற்கு, இராணுவத்தினருக்கு சட்ட அதிகாரங்களை வழங்கியது யார்? அவர்களே, இச்சம்பவத்துக்குப் பொறுப்பாளிகள் ஆவர்.

அங்கு கடமையிலிருந்த படையினர், பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுவிட்டனர் என, இராணுவத் தரப்பால் ஊடக அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதனூடாக, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் பெற்றுக்கொடுக்கப்பட்டு விட்டதென்றால் அது பொய்.

சிவில் நிர்வாகத்துக்குள் நுழைக்கப்படும் இராணுவத்தலைகளின் எண்ணிக்கை, நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஜனநாயக நாடொன்றில், இராணுவத்தினரை வகைதொகையின்றி சிவில் நிர்வாகத்துக்குள் உள்ளீர்த்துக்கொள்வது எந்தவகையிலும் நியாயமற்ற செயலாகும்.

பயணக்கட்டுப்பாட்டிலேயே இவ்வாறான அட்டூழியங்கள் அரகேற்றப்பட்டிருந்தால், யுத்த காலத்தில் எவ்வாறான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கும் என, இராணுவத்துக்கு எதிராகக் கைகளை நீட்டுவது அவ்வளவுக்கு கடினமான காரியமாக அமையாது.

தங்களுடைய பொறுப்புகள், கடமைகள் என்ன என்பது தொடர்பில், ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்டாலே, தேவையில்லாத பிரச்சினைகள் தலைதூக்குவதைத் தவிர்த்துக்கொள்ளலாம். ஒழுக்கம், கட்டுக்கோப்புகள் போன்றவற்றைக் கற்பித்துக்கொடுக்க வேண்டியது, அந்தந்தப் பிரிவினருக்கு உரியதாகும்.

இராணுவத்தினர் குற்றமிழைத்தால், அவர்களைத் தண்டிப்பதற்கு இராணுவச் சட்டங்கள் இருக்கின்றன. இவ்வாறான நிலையில், நீதிமன்றங்களைத் தவிர வேறெந்தத் தரப்பினருக்கும், சட்டத்தைக் கையிலெடுக்கும் அதிகாரம் இல்லை என்பதை நினைவில் கொள்ள வலியுறுத்துகின்றோம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நியாயங்களை நிறுத்தி வைக்க முடியாது; அது பரந்தது. ஆனால், உண்மை நிலை ஒன்றுதான். பொய்மை பல வடிவங்களை எடுக்கும்.

இன்று உலக நாடுகளில் மக்களின் வாழ்க்கை நிலை, அவரவர் சமூக கலாசாரத்தின்படி இயங்குகின்றன. வாழும் முறைகள் வெவ்வேறாக இருக்கலாம். எங்கள் வாழ்வு முறை பிடிக்காமலும் போகலாம். இவை அவரவர்கள் பழக்கத்தைப் பொறுத்தது.

ஆனால், நீதி என்பதில் மாற்றம் இல்லை. சமூக நிலைகளில் வேறுபாடு இருந்தாலும் நீதி ஒன்றேதான். வெவ்வேறாகச் சட்டங்கள் இருந்தாலும் செய்த தவறுகளுக்குத் தண்டனை பொதுவானது.

சில நாடுகளில் மத கலாசாரங்களில் சட்ட முறைமைகளில் வேறுபாடுகள் உண்டு. காலத்துக்குக் காலம், சட்டங்களில் சில மாற்றங்களை அரசாங்கங்கள் செய்வதுண்டு. சட்டம் இயற்றுவதில் பேதம் இருத்தலாகாது.

நீதி, உண்மை, மனிதாபிமானம் எனப் பல முறைமைகள் சமூகத்தில் உண்டு. மனிதாபிமானம் கூட, அன்பின் ஒரு வடிவம்.

எல்லோருக்கும் சட்டம் பற்றித் தெரியாது. அதை உணராமலேயே பல பிரச்சினைகள் உருவாகின்றன. அன்பின் பிரவாகம் மேலோங்கினால் நீதி, நியாயங்கள் நிலைபெறும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இந்திய சினிமாவும் ஈழத்தமிழர்களும்



என்.கே. அஷோக்பரன்

அண்மையில் வெளிவந்த, இரண்டு இந்திய சலனச் சித்திரப் படைப்புகள், புலத்தில் வாழும், அதைவிடக் குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அதில், முதலாவது அமேஸன் ப்ரைம் தளத்தில் வெளியான ‘ஃபமிலி மான்’ தொடரின் இரண்டாவது பகுதி. அடுத்தது, கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில், தனுஷ் நடித்து நெட்ஃப்ளிக்ஸ் தளத்தில் வெளிவந்த ‘ஜகமே தந்திரம்’ என்ற திரைப்படம்.

இந்திய சினிமாவில் ஈழத்தமிழர்களும் ஈழத்தமிழர் பிரச்சினையும் கையாளப்படுவது இது முதன் முறையல்ல; அதுபோல, இது கடைசிமுறையாகவும் இருக்கப்போவதில்லை.

ஆனால், ஒவ்வொரு முறையும், ஈழத்தமிழர்களையும் ஈழத்தமிழர்களின் அரசியலையும் ஈழத்தமிழர் பிரச்சினையையும் காட்சிப்படுத்தும் போது, இந்திய சினிமா, ஈழத்தமிழர்களுக்கு பெரும் அநீதி இழைப்பதான உணர்வு, பல ஈழத் தமிழர்கள் இடையே எழுந்துவிடுகிறது.

“சினிமாவைச் சினிமாவாகப் பாருங்கள்; அது, பொழுதுபோக்கு மட்டும்தான்” என்று சொல்லி, இதை அமைதியாகக் கடந்து செல்லக் கூறும் அறிவுரைகள், தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல, ஈழத் தமிழர்கள் இடையேயும் எழுவதையும் அவதானிக்கலாம். அதில் ஒருவகை நியாயமும் தென்படலாம்.

ஆனால், கலையும் எழுத்தும் பேச்சும் மனித இனத்தை ஆளும் மிகப் பலமான ஆயுதங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒன்று, உலகமெங்கும் வாழும் தமிழர்களை, ஆளும் கலையாக, சினிமாவே இருக்கிறது. தென்னிந்திய தமிழ்ச் சினிமா மொழி, ஈழத் தமிழர்கள் உள்ளிட்ட உலகெங்கும் வாழும் தமிழர்களின் மொழிப் பயன்பாட்டில், இன்று தாக்கம் ஏற்படுத்தி இருக்கிறது என்பது, தமிழ்ச் சினிமா கொண்டுள்ள ஆதிக்கத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

ஆகவே, அத்தகைய ஆதிக்கம் மிக்கதொரு கலைவடிவம், ஒருவகையான கருத்தியலை முன்னிறுத்தும் போது, அது அந்த மனிதக் கூட்டத்தினிடையே செல்வாக்கைப் பெறுவதாகவும் மற்றைய மனிதக் கூட்டங்களிடையே, குறிப்பிட்ட அந்த மனிதக் கூட்டத்தைப் பற்றி, அறிமுக அடையாளமாகவும் மாறிவிடுகிறது.

இந்த அடிப்படையில்தான், ஈழத் தமிழர்கள் பற்றிய இந்தியப் படைப்புகள் மீதான, ஈழத் தமிழர்களின் அதிருப்தியும் எதிர்ப்பும் எழுவதையும் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

மறுபுறத்தில், இந்தியப் படைப்புகள் என இந்தப் படைப்புகளை ஒரே வகைக்குள் அடக்குதலும் பொருத்தமானதல்ல. மேற்கூறிய இரண்டு உதாரண படைப்புகளை எடுத்துக்கொண்டால் கூட, அவற்றின் படைப்பாளிகள், அவை பேசும் அரசியல், அந்தப் படைப்புக்கான நோக்கங்கள் ஆகியன வேறுபட்டவை. ஆகவே, இவையும் வெவ்வேறாக நோக்கப்பட வேண்டியவை.

இதற்குள் குறைந்தபட்சம் மூன்று வகையான படைப்புகளை நாம் அடையாளம் காணலாம். குறித்ததொரு திரைப்படைப்பில், ஈழத் தமிழர்களைப் பற்றிய வெளிப்படுத்தல்களையும் ஈழத் தமிழ் கதாபாத்திரங்களையும் கொண்ட படைப்புகள் ஒருவகை. கமலஹாசன் நடித்த ‘தெனாலி’, சூர்யா நடித்த ‘நந்தா’, மாதவன் நடித்த ‘நளதமயந்தி’ உள்ளிட்ட படைப்புகள், இந்த வகையைச் சார்ந்தவை.

இவற்றில், ஈழத்துத் தமிழ் என்று கருதி, இவர்கள் பேச முயற்சித்த மொழி பற்றிய விமர்சனங்களைத் தாண்டி, பெருமளவான அரசியல் முக்கியத்துவம் இவற்றுக்குக் கிடையாது. இத்தனை வருடங்கள் கடந்தும், தென்னிந்திய தமிழ் சினிமாவால், ஈழத்தமிழை முறையாக உச்சரிக்கக் கூட முடியாதிருப்பது, ஒரு புரியாத புதிர்தான்.

இரண்டாவது வகை, ஈழத் தமிழர் அரசியலை அல்லது இலங்கையில் நடந்த போராட்டத்தைத் தொட்டுச் செல்லும் திரைப்படங்கள். ‘ஜகமே தந்திரம்’ திரைப்படத்தை இந்த வகைக்குள் உள்ளடக்கலாம். அடிப்படையில், இது ஒரு தாதாக்கள் பற்றிய திரைப்படம் (ganster film). இரண்டு தாதாக்களிடையேயான கருத்தியல் வேறுபாடாக, ‘வந்தேறுகுடிகள்’ எதிர் ‘பூர்வக் குடிகள்’ என்பது முன்வைக்கப்படுகிறது.

இங்கிலாந்தை மையப்படுத்திய கதைக்கு வசதியாக, இங்கிலாந்தில் அகதிகளாகக் குடியேறிய ஈழத் தமிழர்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இந்தக் கதையை எடுத்துக்கொண்டால், இங்கு ஈழத் தமிழர்களுக்குப் பதிலாக, போரால் பாதிக்கப்பட்டு, மேற்கு நாடுகளில் அகதிகளாகக் குடியேறிய வேறு எந்த இனமும் சித்திரிக்கப்பட்டு, இந்தக் கதை படம்பிடிக்கப்பட்டிருக்க முடியும். ஏனென்றால், கதைக்குத் தேவைப்படுவது, வேறுநாட்டிலிருந்து போரால் பாதிக்கப்பட்டு, எப்படியோ தப்பி வந்து, மேற்கில் அகதிகளாகக் குடியேறி, அங்கு கஷ்டப்பட்டு உழைக்கும் ஓர் இனக்கூட்டம் ஆகும்.

அதை எதிர்க்கும் பூர்வக்குடி அமைப்பு; அந்த எதிர்ப்பை முறியடிக்கும் நாயகன். இந்த வகை திரைப்படங்களில், உண்மைக்கு மாறான காட்சிப்படுத்தல்கள் பற்றிய பிரச்சினைகள் எழுந்தாலன்றி, இவற்றின் அரசியல் தாக்கம், முக்கியத்துவம் பெருமளவுக்கு இல்லை.

ஆனால், மூன்றாவது வகையைச் சார்ந்த படைப்புகள் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனென்றால், அவை அரசியல் பற்றி நேரடியாகவோ, மறைமுகமாகவோ பேசும் படைப்புகளாக அமைகின்றன. அதனால்தான், அவை பிரச்சினைக்கு உரியவையாகவும் சிக்கலானவையாகவும் கருதப்படுகின்றன என்பதோடு, கடும் விமர்சனத்துக்கும் எதிர்ப்புக்கும் ஆளாகின்றன. இந்த வகைக்குள் மணிரத்னம் இயக்கத்தில் உருவான ‘கன்னத்தில் முத்தமிட்டால்’ திரைப்படமும் ‘ஃபமிலி மான் 2’ திரைப்படமும் வருகின்றன.

இந்த இந்தியப் படைப்புகளிடையே, ஓர் ஒற்றுமையை நாம் அவதானிக்கலாம். இவை இந்திய தேசியவாதத்தை முன்னிறுத்தும், இந்திய அரசின் நலன் மையப் பார்வையை முன்னிறுத்தும் அரசியலை, நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தமாகச் சொல்லும் படைப்புகள் ஆகின்றன.

அவை முன்னிறுத்தும் அரசியலுக்கும் கருத்தியலுக்கும் முரணானவற்றைப் பிழையானதாகச் சித்திரிக்கின்றன. அதனைச் செய்வதற்கு, அவை பாதி உண்மைகளை மட்டுமல்ல, பொய்களையும் பொய்யான கற்பனைகளையும் பயன்படுத்துகின்றன. இந்த இடத்தில்தான், அவற்றுக்கு எதிரான கடுமையான விமர்சனங்கள் தலைதூக்குகின்றன.

இந்திய அரசாங்கத்துக்குத் தேவையான பகடைக் காய்களாக, ஈழத்தமிழர்கள் இன்றும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ‘இலங்கை’ என்ற இந்தப் பூகோள தந்திரோபாயம் மிக்க தீவில், இந்தியா தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ள, வசதியான துருப்புச் சீட்டு ஈழத்தமிழர்களும் இலங்கையின் இனப்பிரச்சினையும்தான். அதேவேளை, ஈழத்தமிழர்களின் விடுதலை உணர்வு, இந்தியாவுக்குக் கடத்தப்படுவதை இந்திய தேசியவாதம் விரும்புவதில்லை. அது, இந்திய நலன்களுக்கு விரோதமானது என்று, இந்திய தேசியவாதம் கருதுவதாக நாம் ஊகிக்கலாம்.

ஆகவே, தமிழ்நாட்டுத் தமிழர்கள் மற்றும் ஈழத்தமிழர்களின் ஒன்றிணைவை, இந்திய தேசியவாதம் ஐயத்துடனேயே அணுகியது. ராஜீவ் காந்தியின் படுகொலையுடன், ஈழத்தமிழர்களின் விடுதலை உணர்வு, இந்தியாவுக்குக் கடத்தப்படுவதைத் தவிர்க்க, ஒரு புறநிலை தார்மிக நியாயப்படுத்தல் (objective moral justification) கிடைத்தது; அதுதான் பயங்கரவாதம்.

ஒரு மக்கள் கூட்டத்தைப் பயங்கரவாதிகளாகச் சித்திரிப்பதுதான், அந்த மக்கள் கூட்டத்தை ஏனையோர் அச்சத்துடன் அணுகச்செய்வதற்கும், அந்த மக்கள் கூட்டத்தின் அரசியலை, சட்டவிரோதமாக்குதவற்கு அல்லது, நம்பகத்தன்மை அற்றதாக்குவதற்கான இலகுவான குறுக்கு வழியாகும்.

இந்த மூன்றாவது வகையிலான படைப்புகள், இதைத்தான் செய்கின்றன என்பதுதான், ஈழத்தமிழர்கள் பலரும் இவற்றை விமர்சிப்பதற்கும் எதிர்ப்பதற்குமான அடிப்படைக் காரணம் ஆகும். நிற்க!

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், இந்தியப் படைப்புகள் இப்படித்தான் அமைய வேண்டும் என்று அவர்களால் கட்டளையிட முடியாது. அதுபோலவே, கற்பனைகளைத் தணிக்கை செய்வது, இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கான ஏற்புடைய வழிமுறையும் அல்ல.

படைப்பது ஒருவரது சுதந்திரம் என்றால், அதற்கான எதிர்ப்பையும் விமர்சனத்தையும் முன்வைப்பது, மற்றவருடைய சுதந்திரம். ஆனால், வெறும் எதிர்ப்போடும் விமர்சனத்தோடும் நின்றுவிடாது, மாற்றுப் படைப்புகளை முன்வைப்பதுதான், நீண்டகாலத்தில் பயனுள்ள தீர்வாக அமையும்.

இந்த இடத்தில்தான், ஈழத் தமிழ் திரைப்படத் துறையின் மறுமலர்ச்சி பற்றி, ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அது புலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் சாத்தியப்படக் கூடியதே!

படைப்பு, மக்களைக் கவர்வதாக அமைகின்ற போது, அது அனைவரையும் வெற்றிகரமாகச் சென்றடையக்கூடிய, திறந்த வாய்ப்புகள் உள்ள ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, மாற்றுப்படைப்புகள்தான் கருத்தியல் சமநிலையை உருவாக்குவதற்கான முதற்படி. அதுபற்றிப் பேசுதல், சிந்தித்தல், முயற்சிகளை முன்னெடுத்தல் என்பனதான் பயன்தருவன.

கார்த்திக் சுப்பராஜ், தனது வசனத்தில் எழுதியதுபோல, “இலங்கைல போர்னா, என்ன கொடுமைடானு உச்சு கொட்டீட்டு, அடுத்த வேலையப் பார்க்கிற கூட்டங்க நாங்க... எனக்கெப்டீங்க இதெல்லாம் புரியும்... எப்டீங்க இதெல்லாம் ஒறைக்கும்” என்பதாகத்தான், ஈழத்தமிழர்கள் பற்றிய இரக்கம் மிகுந்த தமிழக உறவுகளின் நிலையே இருக்கிறது.

ஆகவே, இந்திய சினிமாவில், ஈழத் தமிழர்களைப் பற்றிய முழுமையான புரிதல் மிக்க படைப்புகளை வழங்கவேண்டும் என்று எண்ணுவது அதீத எதிர்பார்ப்பாகவே அமையும். அவர்கள் விசுவாசமாக, அதை முயன்றாலும் கூட, அது கடினமானதே! ஆகவேதான், தனக்கான குரலாகத் தானே இருக்க வேண்டியது அவசியமாகிறது.

‘தொப்புள் கொடி உறவுக்கு’ என்று ஒரு தார்ப்பரியம் இருக்கிறது. தொப்புள்கொடி என்பது, பிறந்தவுடன் வெட்டிவிடப்படும் ஒன்று. அது, இருந்ததற்கான அடையாளம் மட்டும் இருக்கும். பாசம் இருக்கலாம்; பற்றும் இருக்கலாம். ஆனால், தாயும் பிள்ளையும் ஆனாலும், வாயும் வயிறும் வேறு; அதுதான் யதார்த்தம்!

## கடிதங்கள்

### தண்ணிமுறிப்பு குள வீதி சேதம்



முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புக் குளத்துக்குச் செல்லும் வீதி, குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்தில் ஈடுபட வேண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குளத்தின் கீழ் வற்றாப்பளை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, அளம்பில், செம்மலை, தண்ணிரூற்று, குமுழமுனை போன்ற இடங்களில் இருந்து சென்று, தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குமுழமுனையில் இருந்து 17 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட குறித்த வீதி, நீண்ட காலமாக புனரமைக்கப்படாது உள்ளது. குருந்தூர் மலையில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால், இராணுவம் பயன்படுத்துகின்ற வீதி மட்டும் தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டு உள்ளதாகவும் விவசாயிகள், நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளவர்கள் தண்ணிமுறிப்புக் குளத்துக்குச் செல்கின்ற வீதி புனரமைக்கப்படாது இருப்பதன் காரணமாக, விவசாயிகள் உரங்களைத் தமது வயல் நிலங்களுக்குச் செல்வதிலும் அறுவடை காலங்களில் அறுவடை இயந்திரங்களை வயலுக்குக் கொண்டு செல்வதிலும் அறுவடைகளை வீடுகளுக்கு எடுத்து வருவதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு, பாதிக்கப்பட்ட விவசாயிகளும் மீனவர்களும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

–நடராசா கிருஸ்ணகுமார்

இலகு ரயில் திட்டம் இரத்து;

# ஜப்பான் நஷ்டஈடு கோரல்

இலங்கையில் ஜப்பானிய கடனுதவியில் நிறுவப்படவிருந்த இலகு ரயில் திட்டம், கடந்த ஆண்டில் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அதற்காக 5,896 மில்லியன் ரூபாயை ஜப்பானிய நிறுவனம் நஷ்டஈடாகக் கோரியுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

சில ஆண்டு காலமாக, இந்த இலகு ரயில் திட்டத்தை நிறுவுவது தொடர்பான ஆரம்பக் கட்டப் பணிகளை இந்த ஜப்பானிய நிறுவனம், இலங்கையில் முன்னெடுத்திருந்த போதிலும், கடந்த ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபனம் இலங்கையில்



துறைமுகங்கள், இதர உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கு முன்னதாக ஆரம்பக்கட்ட ஆய்வுப் பணிகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2020 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் இரத்துச் செய்யப்பட்ட போது, குறித்த நிறுவனத்தால் ஏற்கெனவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருந்ததுடன், நிதியும் வழங்கப்பட்டிருந்தன.

குறித்த திட்டத்துடன் தொடர்புடைய கடன் உடன்படிக்கை கொள்கைத் தீர்மானத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஆலோசனை ஒப்பந்தமும் இடைநிறுத்தப்பட்டதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

அரசாங்க கணக்குகளை மீளாய்வு செய்ததன் பின்னர் கருத்துத் தெரிவித்த சட்டமா அதிபர், சம்பந்தப்பட்ட ஆலோசனை நிறுவனம் 5,896 மில்லியன் ரூபாய் நஷ்டஈட்டை கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்காக 130 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உடன்படிக்கையில், ஆலோசனை நிறுவனத்துடன் இலங்கை கைச்சாத்திட்டிருந்தது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



## UnionPay இன்டர்நஷனல் உடன் mCash கைகோர்ப்பு

SLT-MOBITEL இன் மொபைல் பணக் கட்டமைப்பான mCash, நாட்டின் இலத்திரனியல் கொடுப்பனவு கட்டமைப்பை மாற்றியமைக்கும் வகையில், UnionPay இன்டர்நஷனல் உடன் கைகோர்த்துள்ளது. இதனூடாக SLT-MOBITEL இலங்கையில் டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தலை மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த இணைந்த நடவடிக்கையினூடாக, mCash மற்றும் UnionPay இன்டர்நஷனலின் பயன்பாட்டை மேம்படுத்தும் என்பதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த mCash வாடிக்கையாளர்கள் மற்றும் mCash விற்பனையகங்களுக்கு நவீன தொழில்நுட்ப மேம்படுத்தல்களை ஏற்படுத்திக் கொடுக்கும்.

மேலும், இந்தப் பங்காண்மையினூடாக, UnionPay இன்டர்நஷனலின் சேவைகளை 25,000க்கும் அதிகமான mCash வலையமைப்புக்கு வழங்கி, அவர்களின் டிஜிட்டல் ஆற்றல்களுக்கு வலுச்சேர்த்து வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த அணுகல் வசதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சௌகரியத்தை வழங்கக்கூடியதாக அமைந்துள்ளது. முன்னணி மொபைல் பணக் கட்டமைப்பான mCash, உலகத் தரம் வாய்ந்த டிஜிட்டல் சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளதுடன், அதற்காக தந்திரோபாய பங்காண்மைகளை ஏற்படுத்திய வண்ணமுள்ளது. இதனூடாக பணப் பாவனை குறைந்த டிஜிட்டல் உள்ளடக்கமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி கூட்டாண்மை நிறுவனங்களுடன் mCash பணியாற்றி, வேகமான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க மொபைல் நிதிச் சேவைகளை வழங்குகின்றது. மேலும், mCash ஊடாக பண வைப்புகள், மீளப் பெறுகைகள், பணத்தை அனுப்புதல் மற்றும் பெற்றுக் கொள்ளல், கட்டணப் பட்டியல் மற்றும் கல்வியக கொடுப்பனவுகள், சொப்பிங், Lanka QR கொடுப்பனவுகள், ஒன்லைன் கொடுப்பனவுகள், நலன்புரி கொடுப்பனவுகள், டிஜிட்டல் நிலையான ஆணைகள் மற்றும் துரித B2B வியாபாரத் தீர்வுகள் போன்ற பரந்தளவு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் குறுகிய காலத்தினுள் mCash பெருமளவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இலங்கையின் டிஜிட்டல் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான mCash இன் அர்ப்பணிப்புக்கு அதன் அதிகரித்துச் செல்லும் வாடிக்கையாளர்கள் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. வாடிக்கையாளர்கள் வாழ்க்கை முறைக்கு பொருத்தமான வகையில் mCash அமைந்துள்ளது.



## முதல் 4 மாதங்களில் 19 மில். அ.டொலர் வருமானம்

ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, முதல் நான்கு மாதங்களில் நாட்டுக்கு 19 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகப் பதிவாகியிருந்ததாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் முதல் நான்கு மாதங்களில் பதிவாகியிருந்த 682 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதுடன் ஒப்பிடுகையில், இந்தப் பெறுமதி பெருமளவு வீழ்ச்சியை பதிவு செய்திருந்தாலும், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக இந்தப் பெறுமதி கடந்த ஆண்டின் பின்பகுதியில் பெருமளவு வீழ்ச்சியடைந்தது.

ஏப்ரல் மாதத்தில் மட்டுப்படுத்தப்பட்டளவு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு சமூகமளித்திருந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் 4,168 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு சமூமளித்திருந்தனர். இந்தப் பெறுமதி மார்ச் மாதத்தில் 4,581 ஆக பதிவாகியிருந்தது. 2021ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 13,797 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். 2020ஆம் ஆண்டில் முதல் நான்கு மாதங்களில் இந்த எண்ணிக்கை 507,311 ஆக காணப்பட்டது. 2021 ஏப்ரல் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளில் பெருமளவானோர் இந்தியா, சீனா, கசகஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்களினூடாக ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாத் துறையின் வருமானம் 6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்ததாக இலங்கை மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தொழில் வாய்ப்புகளை வழங்க தொழில்நுட்ப பூங்காக்கள்

ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், தகவல் தொழில்நுட்ப சேவை ஏற்றுமதிகளினூடாக அந்நியச் செலாவணியை கவர்ந்திழுக்கும் மேலதிக வழிமுறையாகவும் ஐந்து தொழில்நுட்ப பூங்காக்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலியில் முதலாவது பூங்கா தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உதவியுடன் நிறுவப்படுகின்ற நிலையில், மேலும் நான்கு பூங்காக்கள், கண்டி, குருநாகல், வடக்கு, கிழக்கில்



நிறுவப்படவுள்ளன.

ஜூலை மாதத்தில் ஆரம்ப கட்ட நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், முதல் தொகுதிப் பணிகள் பூர்த்தியடைந்ததும், தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய 500 தொழில் வாய்ப்புகள் குறுங்கால அடிப்படையில் உருவாக்கப்படும். மேலும் 2,000 தொழில் வாய்ப்புகள் நடுத்தர காலப்பகுதியில் உருவாக்கப்படும். இந்தத் தொழில்நுட்ப நகர பூங்காக்களை நிறுவுவதற்கு நிறுவனங்கள் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளன. இந்தப் பூங்காக்களில் நவீன வசதிகள், 5G தொழில்நுட்பம், பொது வசதிகள் அனைத்தும் உள்ளடங்கியிருக்கும்.

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம்;

தமிழகம்

# ‘ஏழு பேரையும் விடுவிக்கக் கூடாது’

### நியாயமானதைச் செய்வேன்– தமிழக ஆளுநர்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தின் போது, குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த, 15 பேர் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை சந்தித்து, “கொலையாளிகள் ஏழு பேரையும் விடுவிக்கக் கூடாது” என, கோரிக்கை மனு அளித்துள்ளனர். அப்போது, “நியாயமானதை செய்வேன்” என, ஆளுநர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக, பாதிக்கப்பட்டவர்களை ஒருங்கிணைத்து, அழைத்துச் சென்ற, ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டர் அனுசுயா தெரிவிக்கையில்;



முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை செய்ய இடம்பெற்ற குண்டு வெடிப்பில், அவர் மட்டும் இறக்கவில்லை. பாதுகாப்பு பணியில் இருந்தவர்கள், கட்சி தொண்டர்கள் எனப் பலரும் இறந்துள்ளனர். அப்படி பார்க்கையில் நடந்தது ஒரு கொலை அல்ல. பல கொலைகளைப் புரிந்தவர்கள் என்பதால் தான், உச்ச நீதிமன்றம், கொலையாளிகளுக்கு மரண தண்டனை வழங்கியது. பின், கருணை அடிப்படையில், அவர்களுக்கு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் இந்திராவை கொன்றவர்களுக்கு தூக்கு தண்டனை கொடுக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டது. ஆனால், ராஜீவ் கொலையாளிகளுக்கு மட்டும், ஏன் இத்தனை தூரத்துக்கு கருணை காட்டப்படுகிறது என, புரியவில்லை. இப்போது, தாங்கள் நிரபராதி என்று பேசும், பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள், தங்கள் தரப்பை, டெல்லி உச்ச நீதிமன்றத்தில் கூறி இருக்கலாமே. அதை விட்டு விட்டு, இப்போது, தியாக பிள்ளையை பெற்றது போல நியாய, தர்மம் பேசுகிறார் என்றார்.



சென்னை

துணை நடிகை சாந்தினி புகார்

## முன்னாள் அமைச்சர் மணிகண்டன் கைது

துணை நடிகை சாந்தினியுடன் பாலியல் தொடர்பில் முன்பிணை பெற முயன்ற முன்னாள் அமைச்சர் மணிகண்டனை, பெங்களூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதேவேளை, முன்னாள் அமைச்சர் மணிகண்டனை சென்னை நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தவுள்ளனர்.

இவர், அமைச்சராக இருந்த காலத்தில், துணை நடிகை சாந்தினியுடன் தொடர்பு ஏற்பட்டது. இதில் இருவரும் நெருக்கமாகப் பழகியதாகத் தெரிகிறது. இது தொடர்பாக சாந்தினி அடையாறு மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

இந்தப் புகாரில், மணிகண்டன் திருமணம் செய்வதாக ஏமாற்றியதாகவும், 3 முறை கட்டாய கருக்கலைப்பு செய்ய வைத்ததாகவும் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மணிகண்டன் சென்னை உயர் நீதிமன்றில் முன்பிணை மனு தாக்கல் செய்தார். ஆனால், சில வாரங்கள் அளிக்கப்பட்ட முன்பிணையை நீதிமன்றம் விலக்கி கொண்டது.

இந்த வழக்கு தொடர்பாக 2 தனிப்படை பொலிஸார் தீவிரமாக விசாரித்து வந்தனர். இவரை பொலிஸார் கைது செய்ய முயற்சித்தபோது, தமிழகத்தை விட்டுத் தப்பியதாக தெரியவந்தது. இதனையடுத்து சைபர் குற்றப் பொலிஸ் மற்றும் உறவினர்கள் உதவியுடன் மணிகண்டன் பெங்களூரில் இருப்பதைக் கண்டுபிடித்தனர். இதனையடுத்து, பொலிஸ் பெங்களூருக்கு விரைந்து சென்று மணிகண்டனைக் கைது செய்தது. இவர் சென்னை கொண்டு வரப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்.

கான்பூர்

ஐந்து பெண்களை திருமணம் செய்த

## போலிச் சாமியார் கைது



உத்தர பிரதேசத்தில் முறையாக விவாகரத்து பெறாமல், ஐந்து பெண்களைத் திருமணம் செய்த போலி சாமியார் கைது செய்யப்பட்டுள்ளார்.

கான்பூரில், ‘பாபா’ என, தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளும் அனுஜ் சேட்டன் கத்தேரியா என்ற போலி சாமியார், 2005ஆம் ஆண்டு, மெயின்புரி மாவட்டத்தை சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்தார். இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்துக்கு விண்ணப்பித்தார்.

இந்த வழக்கின் விசாரணை, நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. பின்னர், 2010ஆம் ஆண்டு, பரேலியைச் சேர்ந்த மற்றொரு பெண்ணை, அனுஜ் திருமணம் செய்தார். இவரும் விவாகரத்துக்கு விண்ணப்பித்து உள்ளார். இதையடுத்து, 2014 ஆம் ஆண்டு, அனுஜ் மூன்றாவது திருமணம் செய்தார். பின்னர், மூன்றாவது மனைவியின் உறவுப் பெண்ணை, நான்காவதாக திருமணம் செய்தார். அந்த பெண், முந்தைய திருமணங்கள் குறித்து அறிந்து, தற்கொலை செய்து கொண்டார்.

இதையடுத்து, 2019ஆம் ஆண்டு, ஐந்தாவதாக அனுஜ், வேறொரு பெண்ணைத் திருமணம் செய்தார். அனுஜ் துன்புறுத்தியதன் காரணமாக, அந்தப் பெண், பொலிஸாரிடம் புகார் அளித்தார்.

இதையடுத்து, அனுஜின் மற்ற மனைவியருக்கு இது குறித்த விவரம் தெரியவந்தது. இதர மனைவியரிடமிருந்து இதுவரை விவாகரத்து முறையாக பெறப்பட வில்லை. எனவே அவர்கள், பொலிஸாரிடம் புகார் அளித்து உள்ளனர்.

இந்நிலையில் கான்பூரில் வைத்து, பொலிஸார் அனுஜைக் கைது செய்தனர். விசாரணையில் அவர், ஆறாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்ய இருந்தது தெரியவந்தது. மேலும் பலரை, தன் வலையில் சிக்க வைத்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை

கள்ளக்காதலனை வரவழைத்து

## கணவனை கொன்ற மனைவி கைது

கள்ளக்காதலுக்கு இடையூறாக இருந்த கணவனை, கொலை செய்த மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர். தற்போது, தலைமறைவாக உள்ள கள்ளக்காதலனைப் பொலிஸார் தேடுகின்றனர்.

நேற்று அதிகாலை இரண்டு மணிக்கு மனைவி, வீட்டுக்குள் புகுந்த மர்மநபர்கள், கணவனை வெட்டிக் கொலை செய்து விட்டதாக கூச்சல் போட்டுள்ளார். சைதாப்பேட்டை பொலிஸார், உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். பின்னர், மனைவியிடம் தீவிர விசாரணை நடத்தினர். இதில், மனைவி, கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவரைக் கொலை செய்தது தெரிந்தது.

“சில ஆண்டுகளுக்கு முன்னர், கோடம்பாக்கத்தில் வசித்தபோது, தி.நகரில் உள்ள ஓர் அழகு நிலையத்தில், குறித்த பெண், பணி புரிந்தார். அருகில் உள்ள கடையில், திருமணமாகாத டெயிலருக்கும் இவருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டுள்ளது. கணவன் வேலைக்குச் சென்றபின், வீட்டில் இருவரும் உல்லாசமாக இருந்துள்ளனர். ஒரு நாள், வீட்டு உரிமையாளர் வெளியே பூட்டு போட்டு, கணவனிடம் சிக்க வைத்துள்ளார். இதில் ஏற்பட்ட தகராறில், தம்பதி பிரிந்து வாழ்ந்தனர்.

ஸ்ரீவைகுண்டம்


தாமிரபரணி ஆற்றில்

## நந்தி, பெண் சிலைகள்

ஸ்ரீவைகுண்டம் அருகே தாமிரபரணி ஆற்றில் கிடந்த நந்தி, பெண் சிலை என்பவை மீட்கப்பட்டன.

தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் அருகே முத்தாலங்குறிச்சி பூந்தலையுடையார் சாஸ்தா கோவில் அருகில் தாமிரபரணி ஆற்றில் அப்பகுதியைச் சேர்ந்த மீனவர் மீன்பிடிக்க சென்றுள்ளார். அப்போது ஆற்றில் நந்தி சிலை கிடந்ததைப் பார்த்து, வருவாய் துறையினருக்கு தகவல் தெரிவித்தார். உடனே அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு சென்று பார்வையிட்டனர்.

அங்கு தாமிரபரணி ஆற்றில் கிடந்த கல் சிலையை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். அந்த சிலையின் காது பகுதியின் அருகில் சேதமடைந்து இருந்தது. பின்னர், ஆற்றில் பெண் வடிவ கல் சிலையும் கண்டு எடுக்கப்பட்டன.



புவனேஸ்வர்

பின்னணி பாடகி தபு மிஷ்ரா

## கொரோனாவால் மரணம்



ஒடிசாவில் பிரபல பின்னணி பாடகியாக இருந்தவர் தபு மிஷ்ரா. இந்தி, வங்காளம் எனப் பல பிற மொழிகளில் 500க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். கொரோனா பாதித்து சிகிச்சை பெற்று வந்த அவர் குணமடைந்து வீடு திரும்பினார்.

இந்நிலையில், அவரது ஒட்சிசன் அளவு குறைவாகவே காணப்பட்டது. அவர் குணமடைந்து விடுவார் என நம்பிக்கை இருந்தது. தொடர்ந்து இரண்டு நாள்களாக அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையை அவர் ஏற்கவில்லை. தீவிர நிலையில் இருப்பதாக சகோதரி துருதி தீபா மிஸ்ரா கூறினார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் மரணம் அடைந்துள்ளார். தபு மிஷ்ராவின் தந்தை கொரோனாவால், உயிரிழந்த நிலையில், 9 நாள்களின் பின்னர் தபு மிஷ்ரா உயிரிழந்துள்ளார்.



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி:

# நியூசிலாந்துக்கு எதிராக போராடும் இந்தியா

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியா போராடி வருகிறது.

இப்போட்டியின் முதல் நாளில் மழை, மைதான ஈரலிப்பு காரணமாக ஆட்டம் எதுவும் இடம்பெறாத நிலையில், நேற்று முன்தினம் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன், தமதணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் என அறிவித்தார்.

இந்தியாவானது இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு இரண்டு சுழற்பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கியிருந்தது.

மறுபக்கமாக, எந்தவொரு சுழற்பந்துவீச்சாளரும் இல்லாமல், ட்ரெண்ட் போல்ட், டிம் சௌதி, நீல் வக்னர், கைல் ஜேமிஸன், கொலின் டி கிரான்ட்ஹொம் என ஐந்து வேகப்பந்துவீச்சாளர்களுடன் நியூசிலாந்து களமிறங்கியிருந்தது.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா, ரோஹித் ஷர்மாவின் 34, ஷுப்மன் கில்லின் 28 ஓட்டங்களுடன் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.

எனினும், பின்னர் ஷர்மா, கில்லை குறிப்பிட்ட இடைவெளிகளில் ஜேமிஸன், வக்னரிடம் இழந்தது. அடுத்து வந்த செட்டேஸ்வர் புஜாராவும், அணித்தலைவர் விராட் கோலியும் நிதானத்தைக் கடைப்பிடித்தனர்.

பின்னர் போல்டிடம் புஜாரா வீழ்ந்ததைத் தொடர்ந்து கோலி, அஜின்கியா ரஹானேயின் இணைப்பாட்டத்தில் நேற்று முன்தின இரண்டாம் நாள் ஆட்டமானது போதிய வெளிச்சமின்மை காரணமாக நிறுத்தப்பட்ட நிலையில், 3 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் இந்தியா பெற்றுள்ளது.

தற்போது களத்தில், கோலி 44, ரஹானே 29 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர்.



இங்கிலாந்து எதிர் இந்தியா:

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த ஒற்றை டெஸ்ட்

இங்கிலாந்து, இந்திய பெண் அணிகளுக்கு இடையே பிறிஸ்டோலில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த ஒற்றை டெஸ்ட் போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 396/9 (துடுப்பாட்டம்: ஹீதர் நைட் 95, சோபியா டங்க்லே ஆ.இ 74, தமி பியூமௌன்ட் 66, அன்யா ஷெர்ஷோபிள் 47, நட் ஷிவர் 42, லோரன் வின்ஃபீல்ட்-ஹில் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்னேஹ் ரானா 4/131, தீப்தி ஷர்மா 3/65, பூஜா வஸ்ரகர் 1/53, ஜூலான் கோஸ்வாமி 1/58)


இந்தியா: 231/10 (ஷெஃபாலி வர்மா 96, ஸ்மிருதி மந்தனா 78, தீப்தி ஷர்மா ஆ.இ 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: சோஃபி எக்கில்ஸ்டோன் 4/88, ஹீதர் நைட் 2/7, அன்யா ஷெர்ஷோபிள் 1/18, நட் ஷிவர் 1/22, கேட் க்றொஸ் 1/40, கதரின் பிரண்ட் 1/42)

இந்தியா (பொலோ ஒன்): 344/8 (துடுப்பாட்டம்: ஸ்னேஹ் ரானா ஆ.இ 80, ஷெஃபாலி வர்மா 63, தீப்தி ஷர்மா 54, தானியா பாட்டியா ஆ.இ 44, பூனம் றாவுட் 39, ஷிகா பாண்டே 18 ஓட்டங்கள். பந்துவீச்சு: கதரின் பிரண்ட் 1/21)

போட்டியின் நாயகி: ஷெஃபாலி வர்மா

இலங்கைக்கு எதிரான

## இங்கிலாந்துக் குழாமில் ஜோர்ஜ் கர்டன்



இலங்கைக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான குழாமில் புதுமுக வேகப்பந்து வீச்சாளர் ஜோர்ஜ் கர்டன் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், காயம் காரணமாக பென் ஸ்டோக்ஸ், ஜொஃப்ரா ஆர்ச்சர், றீஸ் டொப்லி, சஃஹிப் மஹ்மூட் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: ஒய்ன் மோர்கன் (அணித்தலைவர்), மொயின் அலி, ஜொனி பெயார்ஸ்டோ, சாம் பில்லிங்ஸ், ஜொஸ் பட்லர், சாம் கர்ரன், டொம் கர்ரன், லியாம் டோஸன், ஜோர்ஜ் கர்டன், லியாம் லிவிங்ஸ்டோன், அடில் ரஷீட், ஜோ றூட், ஜேஸன் றோய், டேவிட் வில்லி, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.

யூரோ கிண்ணத் தொடர்:



## போர்த்துக்கல்லை வென்ற ஜேர்மனி

### சமநிலையில் பிரான்ஸ் – ஹங்கேரி போட்டி

யூரோ கிண்ணத் தொடரில், ஜேர்மனியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், நடப்புச் சம்பியன்கள் போர்த்துக்கல்லுக்கும் இடையிலான போட்டியில், 4-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வென்றது.

ஜேர்மனி சார்பாக, கை ஹவேர்ட்ஸ், றொபின் கொஸென்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய இரண்டு கோல்களும் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. போர்த்துக்கல் சார்பாக, கிறிஸ்டியானோ றொனால்டோ, டியகோ ஜோட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தனர்.

இதேவேளை, ஹங்கேரியில் நடைபெற்ற அவ்வணிக்கும், பிரான்ஸுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் தென்னாபிரிக்கா



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சென். லூசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் இரண்டாம் நாள் முடிவில் முன்னிலையில் தென்னாபிரிக்கா காணப்படுகின்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட தென்னாபிரிக்கா, குயின்டன் டி கொக்கின் 96, அணித்தலைவர் டீன் எல்கரின் 77 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கைல் மேயர்ஸ், கேமார் றோச் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளையும், ஷனொன் கப்ரியல் 2, ஜேடன் சியல்ஸ் மற்றும் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்நிலையில், தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், வியான் முல்டரிடம் 3, ககிஸோ றபாடாவிடம் 2, லுங்கி என்கிடியிடம் 2, கேஷவ் மஹராஜ்ஜிடம் 2, அன்றிஜ் நொர்ட்ஜேயிடம் ஒரு விக்கெட் என சகல விக்கெட்டுகளையும் இழந்து 149 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜெர்மைன் பிளக்வூட் 49, ஷே ஹோப் 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஈரான்

# புதிய ஜனாதிபதி றைசி



ஈரானின் எட்டாவது ஜனாதிபதியாக, கடும்போக்குவாத நீதித்துறைத் தலைவரான இப்ராஹிம் றைசி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக, அந்நாட்டு உள்நாட்டமைச்சு அறிவித்துள்ளது.

48.8 சதவீதமாக காணப்பட்ட வாக்களிப்பு வீதத்தில், 61.95 சதவீதமான வாக்குகளை றைசி வென்றுள்ளதாக உள்நாட்டமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

1979ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின்னரான ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கான குறைந்தளவு வாக்களிப்பு இதுவாகும். 28,933,004 வாக்குகளை றைசி பெற்றிருந்தார்.

தேர்தலில் இரண்டாவது இடத்தில் 3,726,870 வாக்குகளுடன் வலிதற்ற வாக்குகள் காணப்பட்டிருந்தன. இஸ்லாமியக் குடியரசு உருவாக்கப்பட்ட பின்னர் இவ்வாறு இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இத்தேர்தலில் மூன்றாமிடத்தை முன்னாள் புரட்சிகர காவலர் தளபதி மொஹ்சென் றெஸயி பெற்றிருந்தார். நான்காமிடத்தை, 2,427,201 வாக்குகளுடன் மிதவாத வேட்பாளரான அப்துல்நஸாவர் ஹெம்மடியும், ஐந்தாமிடத்தை 999,718 வாக்குகளுடன் கடும்போக்குவாதி அமிர் ஹொஸெய்ன் கஸிஸடெஹ் ஹஷெமியும் பெற்றனர்.

இந்நிலையில், இவ்வாண்டு ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் றைசி பதவியேற்கவுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டிலேயே ஐக்கி அமெரிக்காவால் தடை செய்யப்பட்டவராக றைசி காணப்படுகின்றார்.




ஐ. அமெரிக்கா

## பைடனின் ‘சாம்ப்’ இறந்தது

தங்களது ஜேர்மன் ஷெப்பர்ட் சாம்ப் இறந்ததை, ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், முதற் பெண்மணி ஜில் பைடனும் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடனுடன் வெள்ளை மாளிகையில் வசித்து வரும் இரண்டு ஜேர்மன் ஷெப்பர்ட்களில் சாம்ப் ஒன்றாகும். கடந்த 2008ஆம் ஆண்டு சாம்ப்பை ஜனாதிபதி பைடன் பெற்றிருந்தார். அப்போதே முன்னாள் ஐ. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உப ஜனாதிபதியாக பைடன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.



## பிரியாமலிருக்க பிணைத்துக் கொண்டோர் பிரிவு

தமக்குள் பிரிவு என்பது இருக்கக்கூடாது என்பதற்காக, ஒன்றாகக் கைவிலங்கிட்டுக் கொண்ட இணை ஒன்று பிரிந்துள்ளது. உக்ரேனிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அலெக்ஸாண்டர் குட்லேயும் விக்டோரியா புஸ்டோவிட்டோவாவும் கைவிலங்கிட்டுக் கொண்ட 123 நாள்களின் பின்னர் பிரிந்துள்ளனர். இப்பரிசோதனையானது அசௌகரியமான உண்மைகளை வெளிக்கொணர்ந்தது என்பதாலேயே தாம் பிரிந்ததாக இவர்கள் கூறியுள்ளனர்.

ச. அரேபியா

## ‘17 ட்ரோன்கள் இடைமறிப்பு’




சவுதி அரேபியாவை நோக்கி யேமனின் ஹூதிகளால் ஏவப்பட்ட ஆறு ஆயுதந்தரித்த ட்ரோன்களை ச. அரேபியா வான் கட்டமைப்புகள் நேற்று முன்தினமிரவு அழித்ததாக, ச. அரேபிய அரச தொலைகாட்சி தெரிவித்துள்ளது.

யேமனில் ஹூதிகளுக்கு எதிராகப் போரிடும் ச. அரேபியா தலைமையிலான கூட்டணியை மேற்கோள்காட்டியே குறித்த செய்தியை அரச தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மேற்குறித்ததுடன் சேர்த்து மொத்தமாக 17 ட்ரோன்கள் நேற்று முன்தினம் இடைமறிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், காமிஸ் முஷைட்டிலுள்ள இராணுவத் தளம் ஒன்றை நோக்கி ஒரு ட்ரோன் ஏவப்பட்டதாக டுவிட்டரில் ஹூதி இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.



பிரித்தானியா

## எதிர்க்கட்சியில் இணைந்த முன்னாள் சபாநாயகர்

பிரித்தானியாவின் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியில் தான் இணைந்துள்ளதாக, பாராளுமன்றத்தின் கீழவையின் முன்னாள் சபாநாயகர் ஜோன் பெர்கௌ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் வாழ்க்கையின் பெரும்பாலான காலத்தை கன்சவேர்ட்டிவ் பாராளுமன்ற உறுப்பினராகவே பெர்கௌ கழித்திருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவதிலும், பாராளுமன்றத்தை நடத்தியதிலும் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், முன்னாள் பிரதமர் தெரேசா மேயுடன் பெர்கௌ முரண்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கன்சவேர்ட்டிவ் கட்சியானது பிற்போக்குதனமாக, பரப்பிய பெருந்திரள்வாதமாக, தேசியவாதமாக, சில நேரங்களில் இனவாதமாக இருப்பதாக தான் இப்போது நம்புவதாக பெர்கௌ தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரை சபாநாயகராக பெர்கௌ காணப்பட்டிருந்தார்.



ஐ. அமெரிக்கா

தொண்டு சைக்கிள் பேரணியை

## மோதிய ஓட்டுநரை சுட்ட பொலிஸார்

ஐக்கிய அமெரிக்காவின் அரிஸோனாவில், தொண்டு சைக்கிள் பேரணி ஒன்றில் சைக்கிளில் சென்றவர்கள் மீது பிக்-அப் ஒன்றை நபர் ஒருவர் செலுத்திய நிலையில், ஆறு பேர் கவலைக்கிடமாக உள்ளனர்.

இந்நிலையில், 35 வயதான வெள்ளையினத்தவரான குறித்த நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றதாகவும், தேடப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பின்னர் அவரை கடையொன்றில், பின்னாலிருந்து பொலிஸார் சுட்டுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 21 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.